தனிப்பிரதி விலை { உள்நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

**KUDI ARASU.**

Reg. No. M. 2041

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா உள்நாடு ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1—12 |
| வெளிநாட்டுக்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங்குலம் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு, விபவ ஞூ மார்கழிமீ 16உ. (30—12—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 36



அநேக தங்க மேடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும் பெற்ற நல்ல மருந்துகள்.

## [ரூ· 1-8-0 அமிர்தரஸம். (Rs. 1-8-0)

சகல நோய்களுக்கும் கைகண்ட ஔஷதம்.

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசராயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாரா லும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தா யுள்ளதும் அமிர்தரசம் தான். நாழிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெற லாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினா லேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

## அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும்தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச் சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதி யையும் போக்கி அன்றாடம் கிரமமாய்மலப்பிரவர்த்திசெய்து தேகத்தை தங்கமய மாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் பெரிய கேட்லாக்கில் பார்க்கவும். 24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

## தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்தமாத்திரை உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோ சனை சேர்த்து செய்யப்பட்டது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியை யும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0 50 மாத்திரை ரூ. 8—8—0. 25 மாத்திரை ரூ. 5—0—0. வி. பி. வேறு.

சகல மருந்துகளின் விபரமும், நோய்களின் தன்மையும், சாப்பிடும் முறை, பத்தியம், ஸ்னானபான அநுபானம் முதலியவைகளும், குணமானவர்களிற் பல ரின் உயர்ந்த நற்சாக்ஷி பத்திரங்களும் அச்சிடப்பட்ட நமது பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

நமது வெளியூர் சோல் ஏஜண்டுகள்.

1. பர்மாவிற்கு:— மு. ச. வடிவேல் பிள்ளை, காந்தி கதர் நிலயம், மொகல் வீதி, ரங்கூன்.
2. தஞ்சைக்கு.— எம். கல்யாணசுந்தர முதலியார், கதர் ஸ்டோர், கடைத்தெரு, மாயவரம்.
3. திருச்சிக்கு—: கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை, புகையிலை மண்டி, 54 தஞ்சை ரோடு, திருச்சி.
4. மதுரைக்கு:— வி. முத்துராமலிங்கம் பிள்ளை, கோவில்தெரு, திண்டுக்கல்,
5. தென் ஆற்காட்டிற்கு:—வி. கே. எஸ். அய்யர். & கம்பெனி, சிவபுரி புகையிலை வியாபாரம், கீழ வீதி, சிதம்பரம்.

இதர வெளியூர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

**தண்டபாணி வைத்தியசாலை,**
292, சைனபஜார், மதராஸ்


சந்தாதாரர்களுக்கு

## அறிவிப்பு

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறுவருஷத்திற்கு சந்தா அனுப் பும்போதும், வேறு ஆவலாதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தாநம்பர் என்பது சந்தாதாரின் விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதி யும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.


அமெரிக்கன் போதனைமுறை.



இங்கிலீஷ் தெரியாதவர்களுக்கும் மாதம் 30 ரூபாய் முதல் 300 ரூபாய்வரை சம்பா திக்கும் விபரம் இனாமாக அனுப்பப்படும். மானேஜருக்கு எழுதவும்.

லாம்பர்ட் லாபரட்டரி,
திருத்தங்கூர் இ. எஸ். 43,
திருநெல்வேலிக்காவல் போஸ்ட்.

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஞூ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடை ந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப் போம். மற்ற விபரத்திற்கு நேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார், இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதரூஸ்

## பனகால் அரசருக்கு அனுதாபங்கள்.

### திருச்சி.

மருத்துவகுல சங்கத்தார் 22—12—28 திருச்சி வாணகர் மேட்டுத்தெருவில் திரு க. பச்சைமுத்து பண்டிதர் தலைமையின்கீழ் பொதுக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் செய்யப்பட்டது.

மருத்துவத்திற்கும் மற்றைய பலபொது நலனுக்கும் நன்மை செய்த பனகல் அரசர் திடீரென காலஞ்சென்றதைப்பற்றி சங்கத்தார் வருத்தமுறுவதோடு வருந்திக்கொண்டிருக்கும் அவர்கள் குடும்பத்தினர்க்கு தந்தி மூலியமாய் இச்சங்கத்தார் அநுதாபம் தெரிவிக்கின்றனர். க. பிச்சை முத்து.

### தூத்துக்குடி.

இவ்வூர்வாசகசாலையின் ஆதரவில் 1104ம் விபவ-ஹு மார்கழி-மீ 5-உ புதன்கிழமை இரவு 7-மணிக்கு ஸ்ரீமான் தே. அ. ச. அய்யம்பெருமாள் நாடார், அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தின் தீர்மானம்.

"சென்னைமாகாண பிராமணரல்லாதாரின் தலைவரும் ஜஸ்டிஸ்கக்ஷியின் மாபெரும் தலைவருமான தென்னாட்டு சுயமரியாதைச்சிங்கம் பானகல் ராஜா அவர்களின் அகால மரணத்திற்காக அன்னாரின் குடும்பத்திற்கு அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறது" என்ற தீர்மானம் தலைவர் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு ஏகமனதாக எல்லாராலும் 5-நிமிஷங்கள் எழுந்து நின்று நிறைவேற்றப்பட்டது. நிருபர்,

### ஓமலூர்.

20—12—28 ஓமலூரில் பென்ஷன் ரிஜிஸ்தார் திரு வாசுராஜ் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அதுசமயம் பனகலரசரின் குணநிசயங்களைக்குறித்து திருவாளர்கள் மிட்டாதார் பி எல். ராமசாமி நாயகர், ஹாப்ராசாம் பி. பே. எல். டி., சண்முக முதலியார். பி. யே. தமிழ்பண்டிதர் ராஜய்யர், ஐயாசாமிக்கவுண்டர், இராமசாமி நாயுடு, அர்த்தனாரி செட்டியார், தே. வே. கதிரிசெட்டியார் முதலான கனவான்கள் பேசினார்கள்.

அப்போது யூனியன் சேர்மன், யூனியன் அங்கத்தினர்கள், கௌரவமாஜிஸ்திரேட்டுகள், பஞ்சாயத்து மெம்பர்கள், கோவாப்ரேடிவ் யூனியன் சங்கத்தார்கள், ஸ்கூல் கமிட்டியார்கள், உபாத்தியாயர்கள், மாணவர்கள், சுயமரியாதைச் சங்கத்தார்கள், திராவிடசங்கத்தார்கள் இன்னும் அநேக முக்கியஸ்தர்களும் வந்திருந்தார்கள்.

முடிவில் ஓமலூர் வாசிகளின் அனுதாபத்தை பனக்கால் மன்னரின் குடும்பத்தார்களுக்கும் தலைவர்களுக்கும் தெரிவிக்க வேண்டுமென்று தீர்மானஞ்செய்தார்கள்.

ஒரு நிருபன்.

### கோவை.

பூளைமேடு, பி. எஸ். ஜி. அன் சன்ஸ் அறநிலையச் சர்வ சனக்கல்லூரியில், 18-12-28-ல் காலை 9-50 மணிக்கு மாணவர்கள் எல்லோரும் குழுமி காலஞ்சென்ற தென்னாட்டுத்தலைவர் பனகால் அரசரின் உழைப்பையும், பெருமையையும் பாராட்டி சில ஆசிரியர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசினார்கள். பின் அவ்வரசர் பெருமானின் குடும்பத்திற்கு தங்கள் அநுதாபத்தை தெரிவிப்பதாக ஓர் தீர்மானம் ஆசிரியராலும், மாணவராலும் ஒற்றுமை யுள்ளத்துடன் நிறைவேற்றப்பட்டது. அரசரிடத்திலுள்ள, அன்பினைக் காட்டுதற்கு அறிகுறியாக கல்லூரிக்கு 18-12-28 ம் நாள் விடுமுறை விடப்பெற்றது. செ. கோபாலசாமி,

### அய்யம்பேட்டை.

பனகால் ராஜா மரணமடைந்த செய்தியைக் கேட்டதும் இந்த நகர வாசிகள் மிகுந்த துக்கத்தையடைந்து திங்கட்கிழமை பகல் 1 மணிக்கு பிராமணரல்லாத வாலிபர் சங்கத்தில் ஆதரவிலும் சுந்தரம்பிள்ளையவர்களின் தலைமையிலும் கூடி தங்களது வருத்தத்தைத் தெரிவித்து தீர்மானம் செய்து தந்தியில் அனுப்பினர். தஞ்சை ஜில்லா போர்டு தலைவரிடமிருந்து பள்ளிக்கூடங்களை மூடும்படி தந்தி வந்ததன் மேல் இவ்வூர் போர்டு உயர்தரக் கலாசாலை செவ்வாய்க்கிழமையன்று காலஞ் சென்ற தலைவருக்கு மரியாதை காண்பிப்பதற்கறிகுறியாக மூடப்பட்டது. புதன் கிழமை மாலை மேற்படி பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் கூடி தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

அன்று சாயங்காலம் 5-30 மணிக்கு திருவாளர் சோமசுந்தரம் பிள்ளை அவர்களின் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடி யூனியன் போர்டு பிரசிடெண்டு திருவாளர் தியாகராய நாடவராயர் பிரேரபணையின் பேரில் ஒரு அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது சமயம் திருவாளர்கள் மகாலிங்கம் பிள்ளை, கோவிந்தசாமி பிள்ளை, அருணாசலம் பிள்ளை, ராமசாமி செட்டியார், ஐயாசாகிப், வரதராஜலு, ரெத்தினசாமி முதலியவர்கள் பேசினார்கள் என்று நமது நிருபர் எழுதுகிறார்.

### அம்பாலூர்.

1928 ம் வருடம் டிசம்பர் மாதம் 18 ந் தேதிமாலை 4-30 மணிக்கு வாலிபர் சங்கத்தின்சார்பாக திருவாளர் எஸ். அர்ஜுனக்கவுண்டர் தலைமையின் கீழ் அம்பாலூர் எஸ். எ பூந்தோட்டத்தின் கண் ஓர் அநுதாபக்கூட்டம் கூடியது, நம் இயக்கத்தலைவரும், அரசியல் நிபுணரும் சென்னை சட்ட சபையில் ஓர் அணிகலமுமாகவிருந்த நம்கள் மாபெருந்தலைவர் பானகால் ராஜா திடீரென காலம் சென்றதாக கேள்வியுற்று வருந்துவதாகவும் அவரது குடும்பத்தாருக்கு தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதாகவும் ஓர் தீர்மானம் ஏகமனதாக செய்யப்பட்டது. ஒரு நிருபர்.

### மதுரை தேவஸ்தானக் கமிட்டி.

இந்து மதபரிபாலன சட்டத்தின் கர்த்தாவாகிய மாஜி பிரதம மந்திரி கனம் பனக்கால் அரசரின் எதிர் பாராத மரணத்தைக் குறித்து அநுதாபம் காட்ட நமது கமிட்டியின் அவசரக் கூட்டம் கூடி 'சென்னை கவர்ன்மெண்டின் மாஜி பிரதம மந்திரியும், இந்து மதபரிபாலன சட்டத்தை இயற்றுவதற்குக் காரணஸ்தரும் பொது ஜனத்தலைவராயுமிருந்து பெருந்தொண்டாற்றியவருமான கனம் பனக்கால் அரசர் சர். ராமராய நிங்கவாரு அவர்கள் கே. டி. சி. ஐ. ஈ., அவர்கள் அகால மரணம் அடைந்ததற்காக இந்தக் கமிட்டி மெம்பர்கள் ஆழ்ந்த துக்கத்தையும் அநுதாபத்தையும் காட்டுகிறார்கள்' என்ற தீர்மானம் எல்லா மெம்பர்களும் எழுந்து நின்று ஏகோபித்து தீர்மானிக்கப்பட்டது.

இந்த தீர்மானத்தின் நகலை கனம் பனக்கால் அரசரின் குடும்பத்தாருக்கு அனுப்ப வேணுமாயும் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு நிருபர்.

### விருதுநகர்

விஸ்வகர்மபால்ய வித்தியாபிவிருத்தி சங்கம்

மேற்படி சங்கக் கட்டிடத்தில் 28-12-28 இரவு 8-மணிக்கு சங்க மெம்பர்களின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் சங்கக் காரியதரிசி கனம், எஸ். பி. மாரியப்பாசாரியாரவர்களால் அடியிற்கண்ட அநுதாபத்தீர்மானம் பிரேரேபிக்க எல்லோராலும் ஏகமனதாய் ஆமோதிக்கப்பெற்றது.

'ஐந்து நதிபாயும் அழகிய நாட்டன்னையும் முப்பத்து முக்கோடி மக்களின் ஒப்பற்ற தலைவரும் வீரபுருஷருமான லாலா லஜபதிராய் அவர்களின் பிரிவையும் தென்னாட்டின் முடிசூடா மன்னரும் பார்ப்பனரல்லாதார் மாபெருந் தலைவரும் சென்னை சர்க்காரின் தூண்டுகோலும், ஏழை பங்காளருமான பனக்கால் அரசரின் அகால மரணத்தையும்பற்றி இக்கூட்டம் அளவிலாத் துக்கமடைகின்றது' காரியதரிசி

எஸ். பி. மாரியப்பாசாரி

### ஈரோடு தாலூகா போர்டு

'சென்னை அரசாங்கத்தின் பிரதம மந்திரியாயிருந்து ஸ்தலஸ்தாபன, சுகாதாரம், ஹிந்து தேவாலயங்களின் பரிபாலனம் முதலிய துறைகளிலும்,' தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும் சொல்லற்கரிய பாடுபட்டவரும் பார்ப்பனரல்லாத கக்ஷியின் தலைவருமான திவான் பகதூர் ஏ. P. ராமராய நிங்கவாரு M. A, B. L. K C. I. E., M. L. C., அவர்களின் பிரிவால் ஏற்பட்ட ஆழ்ந்த அனுதாபத்தை அவரது குடும்பத்தாருக்கும் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தாருக்கும் விசனத்துடன் தெரிவித்து கொள்ளுகிறோம் என்ற பிரசிடெண்டவர்களின் தீர்மானத்தை எல்லா மெம்பர்களும் அங்கீகரித்து சிறிது நேரம் எழுந்து நின்று தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

ஒரு நிருபர்.

## ருதுமதி விவாகத்தால் பிராமணதர்மம்கெட்டுப் போவதற்கு

# கெடாத பிராமண தர்மம் ஒன்றுமில்லையே.

### கைவல்ய சாமியார் எழுதுவது.

உலக போகங்களை விட்டவனே பிராமணன். பிராமணனாக வேண்டுமானால் உலகபோகங்களை விட்டு விடவே வேதம் கற்பிக்கிறது. சுருதி ஸ்மிருதிகளில் எழுதப்பட்டிருக்கும் அனேகபாகங்கள், பிராமணன் குற்றமற்றவனாய் உலக ஆசையிலிருந்து நீங்கி மற்றவர்களுக்கு ஞான உபதேசங்கள் செய்யவே எழுதப்பட்டிருக்கின்றன. அது ஒன்றினாலேயே பிராமணன் உயர்ந்தவனென்று கருதப்பட்டான். மற்றவர்களைத் தாழ்வாக நினைக்கவும் உலக போகங்களை யெல்லாம் தன்னுடையதாக அநுபவிக்கவும் பாப்பானுக்கு எந்தச் சாஸ்திரமும் விதிக்கவில்லை வேதங்களைப் படிக்கும் தொழிலில் பாப்பானிருந்தமையால், அவனே அதைப்படித்து தன்னிஷ்டம் போல் அதன் அர்த்தத்தைச் செய்து, அதைத் திருத்தித் தனக்கு அனுகூலமானதைக்கூட்டி, அதையும் ரிஷிகள் வார்த்தை என்று கற்பித்து, அதற்கும்வியாக்யானம் செய்து நம் தேசமெல்லாம் பரப்பி விட்டார்கள். பின் வந்த பாப்பார்கள் அதைப் படித்தும் கேட்டும் தம் காரியத்திற்கும் உலகப் பெருமைக்கும் அவை அனுகூலமாக இருப்பதால் பிராமணதருமத்திற்காக உலக ஆசையை விட அசக்தர்களாகி. உத்தியோக ஆசைக்கு வசப்பட்டு, 'எந்தத் தொழில் செய்தாலும் எந்த பாவகாரியங்களைச் செய்தாலும் நான் பிராமணன் மற்றவர்கள் தாழ்ந்தவர்கள்' என்று நினைப்பதால் பாப்பார்கள் நிந்திக்கப்படுகிறார்கள்.

சுருதிக்கு ஸ்மிருதி விரோதமாயிருப்பின் அந்த ஸ்மிருதி தள்ளப்படவேண்டும். ஸ்மிருதிகளும் காலந்தோறும் மாறிக் கொண்டேவரும். ஜனங்களுக்குள் ஒரு காலத்திலுள்ள ரீதி நீதிகள் மாறிப் புதிய ரீதிகளும் சம்பிரதாயங்களும் குடி கொள்ளும் போது ஜனங்களின் ஆசார வியவகாரங்களுக்கு முக்கிய பிரமாணமாயுள்ள ஸ்மிருதிகளும் காலந்தோறும் மாறவேண்டும். அப்படி மாறவிடங் கொடுக்காத குற்றம் சுருதியைப் பலமற்றதாகச் செய்து ஸ்மிருதியின் கொடுங்கோலே நம் நாட்டைப் பாழ்படுத்திவிட்டது. விதிகளும் சம்பிரதாயங்களும் சேர்ந்த கர்மகாண்டமானது நமது தேச சமூகத்தின் சக்தியைச் சப்பி விட்டது. விதைகளைக் காப்பாற்றும் வரையில் உமியானது அவசியம் மூடியிருக்க வேண்டியது போல விதிகளும் ஒழுங்குகளும் சில காலம் வரையில் உதவிக்கு வேண்டியிருக்கலாம். ஆனால் சில காலத்திற்குள். மாறி விடாவிட்டால் அவைகள் விர்த்தியைக் கெடுத்து விடக்கூடிய கொடுமை பொருந்தியவைகளாகிவிடும்.

அன்புக்குரிய பாப்பார்களே! சற்று கவனியுங்கள். ஸ்மிருதிகளும் விதிகளும் உங்களுக்காக ஏற்பட்டவை. நீங்கள் அவைகளுக்காக ஏற்படவில்லை. நித்தியமான சுருதியின் உபதேசங்களை நீங்கள் கை விட்டு விட்டு பிராமண தருமத்தையே பாழ்படுத்திவிட்ட நீங்கள் உங்கள் ஸ்மிருதிகளை மாத்திரம் காலத்திற்குத் தக்க அளவு மாற்றுவதில் பிராமண தருமம் போய் விடுமென்று சொல்லுவது ஞாயத்திற்கு ஒத்ததா? சென்னாட்டில் சாக்ஷி சொன்ன பாப்பானில் யாராவது தன் காரியமான உலக போகங்களில்ஸ்மிருதிகள் விதித்த பிராமண தருமங்களுக்குட்பட்டு ஆணைக்கு அடிமைப் படாதிருந்ததை நீங்கள் பார்த்தீர்களா? சுருதியின் உபதேசங்களான தத்துவம் ஒன்று தவிர மற்றெல்லாம் காலத்திற்குத் தக்கவாறு மாறவேண்டும். மாறி விடுமென்று சொன்ன நம் சாஸ்திர நிச்சயத்தை ஆலோசியுங்கள். வேதம் நான்கு, வேதாங்கங்கள் ஆறு. வேத சகாயசாஸ்திரம்நான்கு ஆகியபதினைந்துசாஸ்திரங்களையும் முப்பத்தாறு வருடமோ பதினெட்டு வருடமோ ஒதி குரு முன்னிலையில் அப்பியசித்து நல்லொழுக்கமுள்ளவனாய் பிரமச்சர்யத்தை அனுஷ்டித்திருக்கும் துவிஜனுக்கு கன்னிகையை தானமாகக் கொடுப்பது பிரமவிவாகம். தன் எக்கியத்தில் புரோகிதனாக விருப்பவனுக்கு தன்பெண்ணைக் கொடுப்பது தெய்வவிவாகம், தான் செய்ய வேண்டிய யாகாதி கர்மங்களுக்காக ஒவ்விரண்டு பசுக்களை வாங்கிக் கொண்டு கன்னிகையைக் கொடுப்பது ஆருஷவிவாகம். ஒரு பிரமச்சாரியை அழைத்து தன் பெண்ணைத்தானம் பண்ணும் போது "நீங்களிருவருமாய் தருமங்களைச் செய்யுங்கள்" என்று கொடுப்பது பிரஜாபத்தி விவாகம். இந்த நான்குமே பாப்பானுக்கு ஸ்மிருதி விதித்த விவாகங்கள். இந்த விதமான விவாகம் செய்த துவிஜன், சாஸ்திரம் விதிக்கும் தினத்தில் பெண்ஜாதியைக்கூடினால் சற்புத்திரனுண்டாய் அதனால் இம்மையிற் பாவமும் பழியும் மறுமையில் நரக துக்கமும் வருமென்று நினைத்து அதை நீக்கி, சற்புத்திரனுண்டாகி தனக்கும் தன் குலத்திற்கும் இம்மையிற் புகழும் அறமும் மறுமையிற் சுவர்க்கமு முண்டாவதன் பொருட்டு சாஸ்திரம் விதித்த தினத்தில் பெண்ஜாதியைக் கூடி ஒரு புத்திரனைப் பெற்று பின் சுவர்க்கத்தின் ஆசையாய் தவசையடைய வேண்டும். ஒரு புத்திரனுக்கு மேற்பட்ட புத்திரர்கள் காம புத்திரர்களென்று தள்ளப்பட்டிருக்கிறது. அவர்களால் சற்கருமங்கள் தடைப்பட்டு அதனால் சுவர்க்க வழி கெட்டுவிடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே பாப்பானுக்கு விதித்த தரும சாஸ்திரம்.

மேற் சொன்ன விவாகம் நான்கே பாப்பானுக்கு ஸ்மிருதியில் சொல்லப்பட்டவை. இந்த நான்கு விவாகங்களையும் அதன் ஏற்பாட்டையும். அதை விதித்த தர்ம சாஸ்திரத்தையும் ஆதாரமாகக் கொண்டே "இந்துக்கள் விவாகத்தை கேவலம் உலக சுகங்களை உத்தேசித்து செய்வதில்லை, பாரமார்த்திகத்தை உத்தேசித்தேசெய்கிறார்கள்" என்று பாப்பார்கள் சொல்லுகிறார்கள். சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட விவாகக்கிரமங்களும் அதிலுள்ள பாரமார்த்திகங்களும் சரியா தப்பா என்பதைப்பற்றி நமக்கு கவலை வேண்டாம். சரியாய் உண்மை தத்துவத்துடன் கூடினதாகவே யிருக்கட்டும். இப்பொழுது அவை பிரயோஜனப்படுமா? பிரயோஜனப்படுகிறதா? பிரயோஜனப்படுத்திக் கொள்ள மார்க்கமுண்டா? பி. ஏ. படிக்கும் பிரமச்சாரிகளிருக்கிறார்களே யல்லாமல் வேதசம்பந்தமான பதினைந்து சாஸ்திரங்களும் படித்து அதன் வழக்கை அனுசரிக்கும் பிரமச்சரிய முடையபாப்பார்களிருக்கிறார்களா? இப்படி ஒருவன் இல்லாவிட்டாலும் அரை குறையாயேனு மொருவனிருப்பானாயின் அவனுக்குப் பெண்ணைக் கன்னிகாதானமாக கொடுப்பதற்கு, விவாகம்பாரமார்த்திகம்' என்றுசொல்லும்பார்ப்பானாவது சம்மதவயது கமிட்டியில் சாக்ஷி சொன்ன பார்ப்பானில் யாராவது சம்மதப்படுவார்களா? நித்தியப்பிச்சை எடுத்து பிரமச்சரிய விரதத்தை அனுஷ்டித்து எச்ய புரோகிதத் தொழிலில் உபாதானம் வாங்கும் பாப்பானை விவாகம்செய்து கொள்ள-பாரமார்த்திக விவாகம் செய்து கொள்ள-இவர்கள் பெண்கள் சம்மதி கொள்ளுமா? என்பதை கவனித்துப்பாருங்கள். வேதம்படித்து படித்த வேதத்தை 42 வயது அல்லது 30 வயதுவரையிலும் அப்பியசித்து பிரமச்சரிய விரதத்தைக் காத்து இல்லறத்தை அடைய வேண்டினால் ஒரு கன்னிகையைத் தானமாகப் பெற்று இல்லறத்தில் வேத ஒழுக்கங்களை நடத்தி ஒரு புத்திரனைப் பெற்று அவனுக்கு வயது வந்தவுடன் வானப்பிரஸ்தாஸ்ரமமடைந்து புறப்பற்றுகளெல்லாம் விட்டுபின்சந்நியாசமடைந்து அகப்பற்றையும் விட்டு மோக்ஷமடைவதே பிராமண தருமமாகும். அவனைத்தான் பிராமணன் என்று சாஸ்திரம் சொல்லுகிறது.

இந்த காலத்தில் ஸ்கூல் பைனல்பரீட்சைக்கு மேற்பட்டு பரீக்ஷாக்கிரமமாகத் தேரி உயர்ந்த பரீக்ஷைகளை அடையும் மாணாக்கர்களே மேலான பிரமச்சாரிகளென்றும், சங்கீதமும் இங்கலீஷ் படிப்பும் தெரிந்த பெண்களேகன்னிகைகளென்றும் தீர்மானப்பட்டு தானே விவாகங்கள் நடக்கின்றன, இதில் பாரமார்த்திகப் பார்ப்பானுக்கு மட்டும் என்ன புகுந்து கொண்டிருக்கிறது? கலியுகத்திற்கு தரும சாஸ்திரம் பராசஸ்மிருதி என்று பாப்பான் சொல்லி ருதுமதி விவாகத் தடைக்கு ஆதாரம் காட்டும் அந்த பராசஸ்மிருதியில் எழுதியிருக்கும்பிராமண தரும வாக்கியங்களை இன்னொரு தரம் வாசகர்களுக்கு ஞாபக மூட்டுகிறேன். அந்நிய "பாஷைகளை எந்தப் பாப்பான் ஓதினானோ அவன் பிரஷ்டனாகிறான், வேதத்தைக் கெடுத்தவனாகிறான், பாவியாகிறான், சண்டாளத்தன்மையை அடைகிறான். மிலேச்ச தேசத்தில் வேதமோதப்படாது. மிலேச்ச தேசத்தை விட்டு வேதியன் போய் விடவேண்டும்"என்று கூட பராசஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. பாப்பானுக்கு கலியுகத்திற்கு முக்கிய பிரமாணமான பராசஸ்மிருதியின் வாக்கியப்படிப் பார்த்தால் இப்பொழுது பிராமணனென்று சொல்லக்கூடிய ஒரு பாப்பானாவதுண்டா? ஸ்மிருதியிலுள்ள பிராமண தருமம் ஒரு அணுகூட நினைத்துப் பார்க்காத பாப்பார்கள் வாலிப விவாகத்தை விட்டு பவ்ன விவாகங்கள் செய்தால் பிராமண தருமம் கெட்டுப்போகுமென்று சொல்லுவதற்கு இப்பொழுது நடக்கும் விவாகத்தில் கெடாமலிருக்கும் பிராமண தருமம் யேதாவதுண்டா? இப்பொழுது நடக்கும் வாலிபச் சேர்க்கையால் உண்டாகும் கஷ்டநஷ்டங்கள் அவரவர்கள் வீட்டிற்கும் அக்கம்பக்கத்திற்கும் வைத்தியர்களுக்கும் நாடு நன்றாகவேண்டுமென்னும் கவலையுடையவர்களுக்கும் தெரிந்தே இருக்கிறது.

முன்யுக தருமங்களின் விதியில் 53 விஷயங்கள் பிராமணனுக்கு காலதத்துவ உணர்ச்சிபெற்ற மகான்கள் தலைவன்மையால் கட்டுப்பாடு செய்தார்கள். அதிலொன்று பிரவுடையாகாத விவாகம். அந்தச்சமயக் கட்டின்படி அச்செய்கைகளை கலியொழிப்பென்று விட்டிருந்தார்கள். கலியுகத்தில் சந்நியாசம் கூடாதென்பதுமொன்று. அதைசங்கரர் கலியுகத்தில் கூடுமென்று நிச்சயம் செய்தார் பின் மாத்வாச்சாரியும் அம்மான் மகளை மணம்புரியலாகாதென்பது போன்ற முதலியவற்றை சித்தாந்தம் செய்தார். மைசூர் முதலிய தேசங்களில் அநேககருமங்கள் விட்டுவிடவும் சேர்த்துக்கொள்ளவும் சாஸ்திரிகள் வழங்குவித்தனர். அவையாருக்கும முடன்பாடாக வழங்கியும் வருகின்றன. இவர்கள் இல்லாது சாதித்தது மேற்கூறிய கலியொழிவின் கட்டுப்பாடுகளப்படிப்படியாய்த்தளர்ந்து போவதற்கு வழிகாட்டியாக விருந்து ஐம்பத்துமூன்றில் ஐம்பத்திரண்டுமொழிந்து ருதுமதி விவாகமொன்றே பாக்கியாக நிற்கிறது. அதுவும் சமூகத்திற்கு பயந்தும்,ருதுவான பெண்களை மறைத்தும்,சஷ்திருதுவாய்விடுவார்களோ வென்று பயந்து ஆகாரமுதலியவைகளால் கொடுமைசெய்தும்வரப்படுகிறது. இதொன்றையும் ஞாயவழியில் விட்டுவிட்டால் கலியின் கட்டுப்பாடு தளர்ந்துபோகுமே ஒழிய பிராமணதருமம் எப்படிக்கெடும்' அப்படிக்

(இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.)

# இதிகாசங்கள்.

## இராமாயணம்-அயோத்யாகாண்டம்

(8-ம் கட்டுரை தொடர்ச்சி)

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்)

இராமன் தன் முடிசூட்டுக்கு வந்த இடையூறால் உண்டான துக்கத்தை எவ்வளவு தூரம் அடக்கியும் முடியவில்லை, கடைசியாகக் கோசலை முன் அவன் அழுகின்றான். அவ்வழுகையும் துக்கமும் சீதையைக் கண்டபோது மேலிடுகிறது. 'கையில் கிடைத்த அரசாட்சியை இழந்தேன். நானும் காட்டுக்குப் போக வேண்டியதாயிற்று" என்று எப்படிச் சொல்வதென்ற சோகத்தால் அவன் உடம்பு வியர்த்தது. கவலையை அடக்க முடியாது தவித்தான்.

கோசலை இராமனைப் பார்த்து "நீ பிறந்த இந்தப் பதினேழு ஆண்டுகளாய்" என்று கூறுவதிலிருந்து இராமனுக்கு அப்போது பதினேழு வயதுதான் என்று தெரிகிறது. ஆனால் அயோத்தியா காண்டம் நாலாவது சருக்கத்தில் தசரதன் கூற்றாக "பரதன் அம்மான் வீட்டுக்குப் போய் வெகு நாளாயிற்று" என்றும், முப்பதாம் சருக்கத்தில் சீதை கூற்றாக "ஆதி பால்யத்தில் தன்னைக் கலியாணம் செய்து தன்னுடன் பல ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் மனைவியைத் தானே பிறரிடத்தில் ஒப்புவித்து அதனால் பிழைக்கிறவனைப் போல" என்றும் வருவதை கவனித்தால் இராமனுக்குக் கலியாணமானபின் பல ஆண்டுகள் கழித்தபின்னரோ இவ்வித நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன என்று தெரிகிறது. இதையே நமது சீனிவாசய்யங்காரும் பக்கம் 131-ல் எழுதிய குறிப்பில் "அயோத்தியில் பனிரெண்டு ஆண்டுகள் வரையில் அவளுடன் நெருங்கிப் பழகியும்" என்று எழுதுகிறார். இதனாலும் வால்மீகி முனிவர் முன்னுக்குப்பின் முரணாக எழுதுகிறார் என்பது வலியுறுகிறது.

மேலும் வால்மீகி முனிவர் இராமன் இரவில் தன் தந்தையைக் கண்டபின் கோசலையைக்கண்டு பின்னரே தன் அரண்மனை யடைகிறானென்று கூறிவிட்டு மறுநாள் காலை நிகழ்ச்சியின்போது 'கோசலை பல நாளாகக் காணாத இராமனை ஆவலோடெதிர் செல்கிறாள்' என்று கூறுகிறார். இவ்வித மாறுபாடுகள் ஏற்பட்டது மிகவும் வியப்பே. இதெல்லாம் வால்மீகி முனிவருடைய அறிவுக்குறைவைக் காட்டும். அன்றேல் இடையில் பலர் அந்நூலிற் செய்த மாறுபாடுகளைக்காட்டும்.

இராமனுக்கு சீதையைப்பற்றிய கவலையே மிகவும் அதிகமாக இருந்திருக்கிறது. அவளைக்கூட அழைத்துப்போனால் அவளுடைய அழகில் ஈடுபட்டு வேறு யாரும் தன்னை தொந்தரவு செய்யக் கூடும் என்ற அச்சத்தால் அவளை அயோத்தியிலேயே விட்டுப்போக நினைக்கிறான். ஆனால் சீதை மிகவும் காம இச்சையுடையவளாதலாலே தன்னை விட்டுப்பிரிந்திருக்க மாட்டாளென நினைந்தே அவளுக்கு வேறுபோக்குக் காட்டுகின்றான். அதாவது, 'பரதனிருக்கிறான் அவன் மனப்படி நடந்துகொள்' என்று கூறுகிறான். ஆனால் சீதைக்கும் பரதனிடத்தில் வெறுப்பு. அதனால் அவள் கோபங்கொண்டு "ஆண்தன்மை யில்லாத உம்மை மணந்தேனே. உமக்கு அழகு ஒன்றே உள்ளது" என்று பலவாறு அவனை இகழ்ந்ததோடு "நீர் கூறுவதைப் பார்த்தால் என்னை பரதனிடம் ஒப்புவிக்கப் பார்க்கிறீரா? என்னை அவன் வெறுக்கிறான். ஆதலின் அவன் வசமிருப்பதினும் உயிரை விடுகிறேன் நீர் வேண்டுமானால் அவருக்கு பரிசாரகராயிரும்" என்று கூறுகிறாள். இராமன் நினைத்தது போலவே சீதைக்குக்காமப் பித்து அதிகம். அதனாலேயே அவள் இராமனோடு போக முயல்கிறாள். அதற்கு அவன் இணங்காமல் பேடிபோலிருந்ததனாலேயே "நீ பரதனுக்குப் பரிசாரகனாயிரு. நான் அவனோடு வாழேன்" என்றெல்லாம் இகழ்ந்து பேசுகிறாள். "இங்கிருந்த நாளெல்லாம் நம்மை அனுபவித்துவிட்டு காட்டுக்குப் போகும்போது நம்மை தள்ளப்பார்க்கிறான், இவனுடைய அழகால் மயங்கிய வேறு அழகிகள் இவனை வசப்படுத்தினால் நம்பாடு திண்டாட்டமாய்விடும். ஆதலின் இவனை விடக்கூடாது" என்றே அவள் துணிகிறாள். மேலும் அவள் அவனைப்பார்த்து "என்னை அழைத்துப் போவதால் உமக்குச் சுகமே, எனக்கும் சுகம். பாலைவனத்தில் பிரயாணம் செய்கிறவர்கள் தங்களுக்கு வேண்டிய தண்ணீரைக்குடித்துவிட்டு மிகுந்ததைக் கொட்டமாட்டார்கள். பிறகு வேண்டியிருக்குமென்று கொண்டு போவார்கள். அப்படியே என்னையும் அழைத்துப்போய்ச் சுகம் பெறுவீராக!" என்று கூறுகிறாள். இதனால் கேவலம் காம இச்சை வசப்பட்டே சீதை இவ்வாறு கூறுகிறாள் என்பது வெள்ளிடை மலையே. சீதைக்கு இராமன் பட்டத்துக்கு வந்தாலும் சரியே ஒழிந்தாலும் சரியே, அவன் அவளுக்கு எப்பொழுதும் காமஇன்பம் தந்துகொண்டே இருக்கவேண்டும். அதனாலேயே அவள்கவலை வேறொன்றிலும் செல்லவில்லை. காட்டிலும் அவனுடன் இன்ப நுகரவேண்டும் இல்லையேல் உயிர் விடுவேனென்கிறாள். பின்னரோ இராமன் அவளை அழைத்துப்போக இசைகிறான். இராமனுடைய எண்ணங்களையெல்லாம் அறிந்தே அவனை சீதை கண்டிக்கிறாள்'

"நான் பூர்வ கர்மத்தின் பயனாகக் காட்டில் வாழ்வேனென முன்னரே சோதிடர் கூறியுளர். பூர்வ கர்மப் பலனை அனுபவிக்காமல் முடியுமா?" என்று சீதை கூறுகிறாள். இவ்வாறு கர்ம வசப்பட்டு அலமரும் ஓர் பெண்ணையும் சிலர் தெய்வமாகக் கொள்கின்றார்களே! பரிதாபம்! பரிதாபம்! சீதை யோனிவாய்ப்பட்டுப் பிறக்கவில்லையென்றும் சனகன் உழும்போது ஏர்க்காலின்கீழ் அகப்பட்டாள் என்றும், அப்பிள்ளையையே அம்மன்னன் வளர்த்தானென்றும் கூறுகின்றார்கள். இது மிகவும் உண்மையே! இதை மறுக்க யாராலும் ஆகாது! ஆனால் அவள் யோனிவாய்ப்பட்டுப் பிறக்கவில்லை யென்பது சிறு பிள்ளையும் மறுத்துரைக்கும் பெரும்பொய். சீதை பகைவர்களால் பிறந்தவுடன் எடுத்துக்கொண்டுவந்து வயற்புறத்திற் போடப்பட்டிருக்கவேண்டும், அல்லது அவள் ஓர் விதவையின் பிள்ளையாக இருக்கவேண்டும், மானம் பொறுக்கமாட்டாமல் ஓர் விதவை அப்பிள்ளையைப்பெற்று ஊருக்கு வெளியே போட்டுவிட்டனள் போலும். அன்றி கலியாணமாகாத ஓர் கன்னிகை கள்ளத்தனமாகப் பெற்ற பிள்ளையைத்தான் இவ்வாறு போட்டுவிட்டனளோ? என ஐயுறவும் இடமுண்டு. திருமணத்தின் முன் பெற்ற பிள்ளையாகிய கர்ணனைக் குந்திமாதேவி மானம்பொறுக்கமாட்டாமல் ஓர் பெட்டியில் வைத்துக் கங்கையில் விடவில்லையா? இவ்வுண்மையை அறிஞர் சிந்தித்து அறிவார்களாக.

இராமாயணத்தை யெழுதிய வால்மீகி முனிவர் பார்ப்பனரானதாலே, அவர்களுக்கு வேண்டிய நலன்களையெல்லாம் தேடுவதற்கு அனுகூலமாக இராமனை தெய்வமென்றும் தெய்வமாகிய இராமனே இவ்வாறெல்லாம் பார்ப்பனர்களுக்கு வேண்டியதெல்லாம் கொடுத்திருக்கிறானதையின் உலகத்தாரும் அவ்வாறே நடப்பார்களெனப் பார்ப்பனரைப் பலவாறு உயர்த்தி யெழுதியிருக்கின்றார். மேலும் பார்ப்பனராலேயே ஆரியர் நிலைபெற்ற நன்மையடைந்தனராதலினாலே அவர்களுக்கு வேண்டும் நலனெலாம் செய்தேயிருப்பர். அதை நம்பிக்கொண்டு தமிழ் மக்களும் இந்தப் பாழான அறிவால் மயங்கித் தாமும் பார்ப்பனருக்குப் பொருளைக்கொடுத்துக் கெடுகின்றனரே! அந்தோ பரிதாபம்! பிறருக்குப் பொருள் கொடுக்கவேண்டுமானாலும் இப்பார்ப்பனர்களுடைய உத்திரவைப் பெறவேண்டுமென்று இராமன் கூறுகிறான். இராமனை வழியனுப்புவதற்கு பார்ப்பனனை வரவழைத்து ஓமம் வளர்த்து வேண்டும் பணத்தைக் கோசலை நிறையக் கொடுக்கிறாள்; இராமனும் புறப்படும்போது தன்னுடைய செல்வங்கள் நகைகளெல்லாம் பார்ப்பனர்களுக்கே கொடுக்கிறான். சீதை தன் நகைகளைப் பார்ப்பனர்களுக்குக் கொடுக்கிறாள். பிறர் உடுத்த உடைகளையும் படுத்த படுக்கைகளையும் அணிந்த நகைகளையும் பார்ப்பனர் பெற்று அணிந்து மகிழ்ந்தனராம். என்னே இவர்தம் இழிசெயல்! ஆரியனாகிய இராமன் முதலியோர் ஆரியப் பார்ப்பனருக்குக் கொடுத்ததும் அவர்கள் ஏற்றதும் வியப்பில்லை. பிள்ளையில்லாதவர் பார்ப்பனரைக்கூடி அவர்தம் திருவருளால் பிள்ளையைப் பெறுகின்றதைக்காட்டிலும் இவை கேவலமில்லை. தசரதன் யாககர்த்தர்களாகிய பார்ப்பனர்களுக்கு தன் மனைவியைத்தந்து பிள்ளையைப் பெற்றானே! ஐயோ கேவலம்! இதுமிகக் கேவலம்! திரியோதனாதியருடைய தந்தையாகிய திருதராட்டிரனும், பஞ்சபாண்டவர்களுடைய தந்தையாகிய பாண்டுவும் வியாசன் என்ற பார்ப்பானுக்கும் மன்னவனுடைய விதவைகளுக்கும் பிறந்த பிள்ளைகளல்லவோ? இக்காலது பேரேற்றுக்கொள்ளத் தசரதன் உயிருடன் இருந்தான். அங்கே பேரேற்றுக் கொள்வதற்குக்கூட ஆளில்லாமல் கணவன் இறந்தபின் விதவைகளாகிய அப்பெண்கள் வேதவியாசனைக்கூடிக் கட்டிகட்டியாகப் பிள்ளைகளைப் பெற்றனரே. இந்தகைய வழியில் வந்ததற்காக ஆரியர் விதவா விவாகத்தைக் கண்டிப்பது மிகவும் கேவலம்! கேவலம்! இக்கண்டனத்தாலேயே சீதை போன்ற பிள்ளைகள் தோன்றிக் காட்டிலும் பள்ளத்திலும், தண்டவாளத்திலும் எறியப்பெறுகின்றனர்.

சீதை இராமனிடம் பேசும் பேச்சுக்களிலிருந்து அவன் அவளை ஐயுற்றதுபோலக் காண்கிறது. அதனால் அவன் அவள் மனதை அறியப் பரதனைப்பற்றிக் கூறினான் என்றும் கொள்ளலாம். இவனுக்கு ஐயம் அடிக்கடி நிகழ்வதுண்டுபோலும். இவ்வையமே சீதையைத் தீப்புகச் செல்லுமாறும் பின்னர் வண்ணான் பேச்சைக்கேட்டுக் காட்டுக்கனுப்புமாறும் இராமனைத் தூண்டியதுமாகும்

"நீ என்னுடன் வனத்தில் வாழவேண்டுமென்று முன்னமே தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது" என்று கூறுகிறான். இந்த இடத்தில் நமது மொழி பெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் எழுதியுள்ள குறிப்பு சிந்திக்கத்தக்கது. அது வருமாறு;— (பக்கம் 133) "இது இராமனுக்கு எப்படித் தெரியுமென்று விளக்கவில்லை. தெரிந்திருந்தால் சீதையை அழைத்துப்போக ஏன் தடைசெய்யவேண்டும்."

இராமனிடத்தில் பிச்சை வாங்க திரிசடன் என்ற ஓர் ஏழைப் பார்ப்பனர் வருகிறானென்கிற இடத்தில் பக்கம் 141-ல் நமது சீனிவாசய்யங்கார் எழுதியிருக்கும் குறிப்பும் கவனிக்கத்தக்கது. அது வருமாறு:— "தசரதர் நீதி தவறாமல் எல்லாக் குடிகளும் மகிழும்படி அரசாட்சி செய்து வரும்பொழுது இப்படியிருப்பதற்குக் காரணம் தெரியவில்லை" "இராமன் ஏன் இந்தத் திரிசடனைக் கவனிக்கவில்லை" இனி கம்பர் புரட்டைக் கவனிப்போம்.

சீதையைப்பார்க்கஇராமன்வந்தபோது 'குடையின்றி, சவரியின்றி, முடியின்றி வருவதென்னே' எனச் சீதை கவன்று வினவினள் என வால்மீகி கூறியதைக் கம்பர் அவன் கோசலையைப் பார்க்க

இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

# "இந்திய மாதா"

(திரு. அய்யாமுத்து எழுதுவது)

(கட்டுரை 8)

## பிள்ளைப் பேறு.

மணப்பந்தலில், மணமகனால் கட்டப்படும் மாங்கல்யம், "நீ உன் பர்த்தாவோடு இணை பிரியாது வாழ்வாய்" என்று கூறுவதில்லை. ஆனால் பின் என்னை? கல்யாணமான சில மாதங்களுள் கர்ப்பக்குறி கண்டால் தான் அவ்வுறுதி ஏற்படும்—இல்லையேல் நமது மனைவிகள் துயரை யார் அறிவார்? "மலடு" என்ற சொல் அவள் காதில் விழுந்தால் அனலிலிட்ட புழுப்போல் துடிப்பள்- அதிகாலையில் எழுந்து, பிள்ளையார் தலையில் குடங்குடமாய் தண்ணீரூற்றி அரசமரம் சுற்றுவள். இம்மாதிரி பல மாதங்கள் செய்தும் கர்ப்பக்குறிகாணாவிடில் பின்னர் சோமவார விரதம், வெள்ளிக்கிழமை விரதம் முதலிய பல விரதங்கள் அநுட்டிப்பள். பின்னர் நாகர் பூசை, நாகர் பிரதிஷ்டை முதலானவை நடைபெறும். சோதிடனை அழைத்து கிரக தோஷம் தீருவதற்காக "சாந்தி" கழிப்பார்கள், கோவில் அர்ச்சனை, அபிஷேகாதிகள் செய்விப்பர், தீர்த்த யாத்திரை செல்வர். பின்னரும் கர்ப்பக்குறி காணாவிடில், மாங்கல்ய பலன் அற்பலமேயாகி விடும்! புருஷன் வேறொரு பெண்ணை மணந்தாக வேண்டும். அவனுக்கும் பிரியமில்லாவிடினும் வீட்டிலுள்ள "கிழங்கள்" மற்றொரு கல்யாணம் செய்வித்தே தீரும்- ஏனெனில் "புத்" என்ற நகரத்திலிருந்து மீட்க "புத்திரன்" இருந்தாக வேண்டும்! தன் சந்ததி விருத்திக்கும், தனது சொத்து சுகங்களை யனுபவிப்பதற்கும் பிள்ளை கண்டிப்பாய் இருந்தாக வேண்டும். பிள்ளைபெறவேண்டும் என்ற இவ்வாசையால் பெண்கள் படும்வேதனைகள் ஏட்டிலடங்கா.

நாட்டுப்புறப்பெண், பிள்ளை பெறாவிடில், பேய் பிடித்தவள் என்று அவளைப்பல தலங்களுக்குக் கூட்டிச் சென்று, அவளை ஈரச் சேலையுடனும், விரித்த தலையுடனும் உட்காரவைத்து, புகைபோட்டு, "ஓங்காரம் போடாயா-டுக்குடுக்கிடி யோங்காரம், அடியோங்காரம் போடாயா டுக்குடுக்கிடி" யென்று உடுக்கை தட்டி, அவளை ஆடவைத்து, பிரம்பால் நையப் புடைத்து, கண்டவன் கையால் செருப்படி போட்டு, கடைசியில் அவள் தலையில் ஒரு பெரிய கல்லையெடுத்து வைத்து, "நாம் போறேல்! நாம் போறேன்! நாம்போறேன் தங்களைவிட்டு" என்று அவளை ஓலமிடச் செய்து, ஒரு மரத்தடியில் கூட்டிச் சென்று, அவள் தலைமயிரில் ஒரு பகுதியை முடிந்து, அம்முடிச்சை மரத்தில மீது வைத்து ஆணி அடித்து பின்னர் அம்முடிச்சைதலையினின்று கத்தரித்து விடுவார்கள். இவ்வாட்டத்தைநீங்கள்பார்க்க வேண்டுமானால்கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள நாட்டாராயன்கோவில் 'ஊப்பச்சிமார்மடம்' "ஈச்சனாரிகோயில்" முதலிய இடங்களுக்குச் சென்றுபாருங்கள். ஸ்ரீமதிமேயோ இவ்விடங்களைப்பார்த்திருந்தால்இன்னும்கம்சாக்கடை நாற்றம் அதிகமாகிவிடும். பிள்ளை பெறவேண்டுமென்ற தாகத்தால் பெண்கள் பற்பலவிதமாகச் செய்யப்படும் வேதனைகளை "ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனா"லும் சொல்ல முடியாதென்றால், கேவலம் ஒரு மேயோவால் என்னதான் சொல்லிவிடமுடியும்?

பெண்கள் கருவுற்று, பிரசவிக்குந்தருவாயில் அவர்கள் படுந்துன்பங்களை ஸ்ரீமதி மேயோ மிகவும் நன்றாக எடுத்துக் காட்டியிருக்கிறார். பிரசவப்பெண்களை தீட்டுஎன்று ஒதுக்கிவைத்துஎவரும் தீண்டாதிருப்பதும், தீண்டப்படாதசாதியென இழித்துக்கூறும் மருத்துவச்சியின் உதவியை அப்போது மட்டும் நாடி அவளை வீட்டின் ரகசிய அறைக்குள் சேர்த்துக் கொள்வதும், மருத்துவம் செய்ய வருபவள் பிள்ளை பெறாதவளாகவும், பிரசவ வேதனையை அனுபவிக்காதவளாகவும் சிற்சில சந்தர்ப்பங்களில் இருப்பதும், பிரசவிக்கும் பெண்ணுக்கு கந்தலாடை கொடுப்பதும், அவளிருக்கும் அறைக்குள் நல்ல காற்றும் வெளிச்சமும் இல்லாமல் செய்வதும், புகை போட்டு திணரச் செய்வதும், சரியானபடுக்கைவிரிப்புகளின்றியும், நல்லஆகாரத்தைக் கொடாததாலும், பிரசவம்கஷ்டமாகின்றகாலத்து மருத்துவச்சிமூடத்தனமாய் நடந்து கொள்ளுவதாலும் சிசுக்கள் இறந்துவிடுவதும், தாய்களேஇறந்துவிடுவதும், அல்லது பிரசவித்தபின் வெகு நாட்களுக்கு வயிற்றுப் போக்கு முதலிய தொந்திரவுகள் ஏற்பட்டு பெண்கள் துன்புறுவதும், மற்றும் இது போன்ற-மெய்யாக நமதுகிராமாந்தரங்களில்நடைபெறும்-மருத்துவ முறையைஸ்ரீமதிமேயோ சுட்டிக்காட்டியிருப்பதை மேனாட்டார் பார்த்து நம்மை 'மூடத்தனமும், அநாகரீகமும் குடிகொண்ட மனிதர்' என்று இழிவாக நினைப்பரென்பதில் ஐயமில்லை. எனினும் உள்ளநிலையையுள்ளவாறே எடுத்துரைத்து நம்மை சீர்திருத்தத்துறையிலிறக்கிய மேயோவை யாம் நண்பரெனவே மதித்து, விரைவில் நமது பெண்மக்கள் துயரைநீக்க முற்படுவோமாக.

நமது பெண்மக்களுக்கு நாம் சரியான- அதாவது அவர்கள் வாழ்க்கைக்குப் பொருத்தமான கல்வி தந்து அவர்கள் அறிவை விர்த்தி செய்து விடுவோமானால் "இந்திய மாதாவில்" பொறித்துள்ளகுறைகள்யாவும் சூரியனைக்கண்ட பனி போல் விலகும். அதுவன்றி ஒளவையின் ஞானத்தைப் பண்டிதர்கள் புகழ்வதாலும், சாவித்திரியின் கதையை நடிகர் நடிப்பதாலும், விசுவாவரை என்ற பெண்பாடியபாசுரங்கள் ரிக்வேதத்தில் இருப்பதாலும், அகஸ்தியரின் மனைவி லோபா முத்திரைபாசுரங்கள்பாடியதாலும், மைத்ரேயி பாண்டித்தியமும், கார்க்கி கல்வித்திறமும், தேவபூதி தத்துவார்த்தமும், நிரம்பியவர்களெனச் சாஸ்திரிகள் பிரசங்கிப்பதாலும் நமது நாட்டில் தற்காலம் வதியும் பெண்கள் ஞானசிரோன்மணிகளாகி விடமாட்டார்கள்.

நமது பெண்மக்களின் அறியாமையானது நம்மைக் கோழைகளாகவும், மூடர்களாகவும்செய்துவிட்டது. வயிறுநிறையஉண்ட குழந்தை பின்னரும் உண்ணமறுத்தால் உடனே தாயானவள் 'அதோபூசசாண்டி! வாயைத்திற'வெனப்பயமுறுத்தி சோற்றை வாயினுள் திணிக்கிறாள். இதனால் குழந்தைக்கு பூச்சாண்டி பயமும், அஜீரணமும் சுகக்கேடும் உண்டாகிறது. பகலெல்லாம் உறங்கினதாலோ, உடல் வேதனையாலோ மற்றெவ்வகையாலோ உறக்கமின்றி விழித்திருக்கும் குழந்தையை தொட்டிலில்போட்டு "இதோ பூனை! அதோநாய்!" என்றுமிரட்டி அப்பிள்ளை மனதில் பயத்தை உண்டு பண்ணுவதும், வெளியில் மைதானத்தில், நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் குழந்தைகள் ஆடிப்பாடிஉற்சாகமுறுவதைத்தடுத்து "அந்தப்புளியமரத்தில் பேய் இருக்கிறது, இந்த வேப்பமரத்தில் முனியிருக்கிறது, இரண்டுபிள்ளைகளைக்கொன்றுவிட்டதுநீவீட்டைவிட்டு வெளியில் போகாதே" என்று மிரட்டி சதா பயமுறச்செய்வதும், அடுத்தவீட்டுக் குழந்தையுடன் தங்குழந்தை சண்டையிட்டால், உடனே தாயானவள் பறந்தோடி பிள்ளையை வீட்டினுள்கொண்டுவந்து பூசைபோடுவதும், கண்ட கண்ட நகைகளையெல்லாம் சிசுக்கள்மீது போட்டு, "வெளில் போகாதே திருடன்-கழுத்தைநிருகிவிடுவான்" என்று பயமுறுத்திப்பிள்ளைகளை கோழைகளாக்குவதும் நமது பெண்கள் அறியாமையன்றோ!

"கல்லென்றாலுங் கணவன், புல்லென்றாலும் புருஷன்" என்று கற்பித்த கற்பலங்காரப்பாடத்தால், பகுத்தறிவில்லாமல், மூட நம்பிக்கைகள் துவண்டு, சரியென்றும் தப்பென்றும் ஆராயாமல் நடக்கும் நிலைமை ஒழியவேண்டும். பெண்வருத்தம் தெரியாத மிருகத்தனமான எத்தனை புருஷர்கள் சதா சம்போகப் பிரியர்களாய், வருடமொன்று தவறினாலும் குழந்தையொன்று தவறாமல் பிறக்கச்செய்கிறார்கள், அந்தோ! வயிறுநிறைய கர்ப்பம், கையில் ஒரு குழந்தை, இடுப்பில் ஒரு குழந்தை, பெண்ணுக்குதேகம்வெளுத்து, கண்கள்பிதுங்கிமெலிவதோற்றத்தோடுஇருந்தாலும்புருஷனுடையசிற்றலுக்குப்பயந்து வீட்டுவேலைகளைகவனித்துக்கொள்ளவேண்டும். வற்றிப்போன மார்ப்பாலானாலும்சவலைக்குழந்தைக்குத்தாய்ப்பால்கொடுக்கவேண்டும்! சவலையின்வயிறு பெருத்து, கால்களும், கைகளும் மெலிந்து விகாரத்தோற்ற முற்றிருக்கும். இவ்வாறான காட்சிகளை ஊர்கள்தோறும் எவ்வளவு வேண்டுமானாலுங் கண்ணுள்ளவர்கள காணலாமே! பெண்களுக்கு நல்லுணாவும், சுதந்திரப்பொலிவும், சொத்துரிமையும், கல்வியறிவும் இருக்குமானல் கல்லையும், புல்லையும் புருஷராகக் கொள்வரோ? அவ்விதம் கொள்வதுதங்கள் தலைவிதியென மதிப்பரோ? இல்லை! இல்லை? முக்காலும் இல்லை!

நமது மடமைகுறித்துமேயோகூறுவது;-

"ஹிந்துக்கள் மூடநம்பிக்கை யுள்ளவர்கள், ஏதாவது ஒருவருக்கு நோய்வந்துவிட்டால் கடவுளே அந்தநோயை வீட்டிற்குக் கொண்டுவந்து விட்டதாகக் கருதுகிறார்கள்'

மாரியாத்தாள், காளியாத்தாள், பிளேக் மாரியாத்தாள் முதலிய 'தேவதைக்கு' பூசைபோடும் வழக்கம் மேலே மேயேகூறிய கூற்றை மெய்ப்பிக்கும்.

மற்றும், பெண்கள் ஆண்களைவிட அதிக மூடவழக்கங்களில் நம்பிக்கையுள்ளவர்கள். எவருக்காவது நோய் வந்துவிட்டால் அத

இதன் தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க.

தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் தலைவரும், சென்னை மாகாணத்தின் முதல் மந்திரியாயிருந்து
பொது மக்களுக்குப் பல அரிய நன்மைகளைச் செய்தவருமாகிய

# :: பனகால் அரசர், ::

## சர். ராமராய நிங்கவாரு M. A, M. L. C,

அவர்கள் உயிர் நீத்தது சகியாது பாடப்பெற்ற

## :: :: இரங்கற்பாக்கள். :: ::

எந்தலைவா! எம்மரசே! எங்ககன்றாய்! எங்ககன்றாய்!
சிந்தைமிகக் கலங்கிடவே எமைவிடுத்துச் சென்றனையே!
அந்தந்தோ! என்செய்வோம்! அருந்துயரம் ஆற்றேமால்!
சந்ததமும் நமக்குழைத்த சர். பனக்கால் மன்னவனே! 1

எக்காலும் சீர்திருத்தத் துறையுழைத்த எந்தலைவா!
தக்கோனே! தரணியுளோர் தாம்வருந்த அகன்றனையோ!
இக்காலம் யாமுமொரு மனிதரென இயன்றிடவே
அக்காமல் உழைத்திட்ட அருளுடைய பனக்காலே! 2

இந்நாட்டின் அறநிலையம் எல்லாமும் பாழுடையப்
பன்னாட்கள் அவைக்குரிய பருப்பொருள்கள் எவற்றையுமே
தன்னாட்கள் உடன்கூடிச் சிலர் அழித்த தகைக்கண்டே
உன்னாட்சி நாளதனில் அறநிலையம் உயர்வதற்கே 3

பல்லோரும் நன்மையெனப் பகர்ந்திடுமோர் சட்டமதை
நல்லோய் நீ இயற்றியுடன் நல்கியதை மறப்பார்யார்?
எல்லோர்க்கும் சமவுரிமை வேண்டுமென எக்காலும்
வல்லோசையுடன் முழங்கும் வள்ளால்! நீ அகன்றனையோ! 4

நாடெல்லாம் மருத்துவத்தை நாட்டுதற்கே மிகவுழைத்தோய்!
பாடெல்லா மக்களுக்கே பட்டிருந்த பனக்காலே!
வீடெல்லாம் நின்பெயரே விளங்கியதால்! ஐயாவே!
ஈடொல்லா எழிலுடையோய்! எங்ககன்றாய்! எங்ககன்றாய்! 5

மாற்றலர்கள் மனங்கலங்க வீற்றிருந்த மன்னவனே!
ஆற்றல்நிறை எந்தலைவா! அரசியலிற் பெருந்திறலோய்!
போற்றிடவே எவ்வெவரும் புரவலனா வாழ்ந்தவனே!
காற்றிலுறு தூசெனவே யாங்கலங்கக் காந்தனையோ! 6

சென்னையரசாங்கமதிற் சிறப்புடனே ஆறாண்டு
மன்னமைச்சுத் தொழில்பூண்டு மக்களவர் நலத்தினையே
உன்னியுழைத் திருந்தவனே! உயர்குணத்தெம் உத்தமனே!
என்னுறவே! பனக்காலின் இறைபவனே என்புரிவேம்! 7

கிராமப்புனர் நிர்மாண வேலையினிற் கிளர்ச்சியுடன்
இராப்பகலாய் மனஞ்செலுத்தி இருந்தவனே! எம்மிறைவா!
தராதலத்தில் வஞ்சகர்கள் தயங்கிடவே வாழ்ந்தவனே!
நிராதரவாய் எமைவிடுத்து நீங்கினையே என்செய்வேம்! 8

எண்ணியதை எண்ணியாங் கெய்துவரால் எண்ணியவர்
திண்ணியரா யிருப்பின்எனும் திருமொழிக்கோர் இலக்காக
வண்ணமுறு கீழ்நாட்டு மருத்துவத்தை வாழ்விக்க
எண்ணியொரு கல்லூரி நாட்டினையே! எந்தலைவா! 9

முடிசூடும் மன்னவனாய் இலனெனினும் மூதறிவால்
படியாளும் பார்த்திபரை ஆக்குதற்கும் அழிப்பதற்கும்
கடியான பலமுடையோய் எனக்கூறிக் கருதார்கள்
இடிகேட்ட நாகமென ஏங்கிடவே இருந்தனையே! 10

எண்ணுவதும் பேசுவதும் எழுதுவதும் இவையெல்லாம்
வண்ணமுற ஆய்ந்தாய்ந்து கணக்குடனே வகுத்திடுவோய்!
ஒண்ணிதியின் பெருக்குடையோய்! உறவறிஞர் நட்புடையோய்
திண்ணியனே! சென்றனையே! பனக்காலின் திருவரசே! 11

சென்னையெனும் மாகாணம் செய்தவத்தால் முடிசூடா
மன்னவனாய் திகழ்ந்திருந்தோய் மலர்முகத்து மதிவல்லோய்!
முன்னமைந்த முதலமைச்சில் முதலமைச்சன் எனவிருந்தோய்!
உன்னைநிகர் தலைவனையே இனியெப்போ தேற்றிடுவோம்! 12

உன்னுருவைக் கண்டாரும் உன்மொழியைக் கேட்டாரும்
உன்செயலை அறிந்தாரும் உன்மனதை உணர்ந்தாரும்
உன்பிரிவுக் குருகாமல் உறைவதற்கும் உரியவரோ!
என்மனதில் என்கண்முன் இறந்தருளும் இறையவனே! 13

அந்தோநம் பனக்காலின் மன்னவன்றான் அகன்றிட்டான்
அந்தோநம் பேரியக்கம் இனிஎவ்வாறாகிடுமோ!
அந்தோநாம் என்செய்வோம்! எனக்கலங்கும் அன்பர்களே!
முந்தோடி வந்திடுவீர் முன்னவன்றன் செயல்முடிப்போம். 14

நமதுபெருந் தலைவனுக்கே நாமாற்றுங் கைம்மாறும்
"எமதுகடன்" எனக்கொண்டே இயற்றியநம் பனக்காலின்
தமதுசெயல் களையெல்லாம் தவறாமல் ஆற்றுவதே
கமழ்நன்றிச் செயலாகும் கடனாற்ற முன்வருவீர்! 15

சாமி சிதம்பரனார்.

---

இன்னா விளைத்தார்க்கு மினியனவே தான் புரியும்
மன்னா பனகல் அண்ணால்!—நின்னையினி
எக்காலங் கண்டு இன்புறுவன் துன்பொழிவன்
அக்காலந் தான் வருமோ தான். 1

அரசியல் நன்மணியே அரிமாவின் பேருருவே!
பரசிப் பகைநடுங்கு மாரே — அரசியலில்
மக்கள் நலன்விழைந்து பக்குவமாய்ப் பணிபுரிந்த
மக்கள் துணையோநீர் மறைந்தீரோ! 2

வேறு.

மன்னனாய்ப் பிறந்திருந்தும் மக்களின் நலனைக்கோரி
அண்ணலே நீரும் நல்ல அமைச்சனாய்ப் பதவி பூண்டு
பன்னரும் பாதகண்டம் பண்டை வாழ்வெய்தப்பாரில்
ஒன்னலர்க் கஞ்சா தூய ஊழியஞ் செய்த கோனே! 3

"தமிழ் மகன்"

---

ஆணில் அழகன் அளந்துரைக்கும் சொல்லழகன்
கோணில் நெறிசேர் குணவழகன் காணில்
ஒட்டாரும் போற்றும் உயர்பனகால் வேந்தனுயிர்
விட்டான் உலகை வெறுத்து. 1

என்னேயிவ் 'விதிவலி'யின் றெவரேநம்
உயிர்த்துணைவர் இனிமை யாகப்
பொன்னே போல் நமைப்புரந்த புகழ்பனகால்
அரசர் பிரான் போனான்! போனான்!
நன்னீரில் நதியானும் நளிர் மதியில்
இரவானும் நலத்தை நாடும்
அன்னைபிரி மகவானும் ஆருயிர் நீக்(கு)
உடலானும் அவனி மீதே. 2

கற்கட்டா கியமடத்தும் கடவுளர் தம்
ஆலயத்தும் காணி யாரும்
சொற்கெட்டாப் பொருட்பெருக்கம் சோரம் போ
வது தெரிந்து சோர்ந்து நாடி.
இக்கட்டாய் எதிர்த்தவர்கள் ஏக்கமுறத்
தாக்கியுயர் சட்டம் செய்து
கற்கட்டாம் புகழ் நிறுத்த நறும்பனகால்
வேந்தே நீ கடந்திட்டாயோ. 3

எத்தனையோ தலைமுறையாய் இந்நாட்டு
மக்கள்தமக் கிணக்க மான
சித்தருள் வைத்ய முறை சீரழிந்த
நிலைமைகண்டு பரிவு கூர்ந்து
புத்துயிர்பெற் றுயர்ந்தோங்கப் போர்புரிந்து
புதுக்கழகம் கண்டோய் நாங்கள்

(இதன் தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

# சென்னையில் பனகால் அரசர் தினம்.

## ஊர்வலங்களும் கடற்கரைக் கூட்டமும்.

### தியாகராயர் நிலையத்தில்

நேற்று மாலை 6 மணிக்கு மௌண்ட் ரோடு தியாகராயர் ஞாபகார்த்த நிலையத்தில் பிரமாண்டமான கூட்டமொன்று கூடியது. அக்கூட்டத்திற்கு சென்னை நகரிலுள்ள பிரபலஸ்தர்களும், மாணவர்களும் மற்றையோரும் வந்திருந்தனர்.

கூட்டம் துவக்கப்படுவதற்கு முன்பிருந்தே ஜனங்கள் தியாகராயர் நிலையத்திற்கு வந்து சேர்ந்து கொண்டிருந்தனர். மாலை 6 மணிக்குள் தியாகராயர் நிலயத்திற்கு எதிரேயுள்ள மைதானம் நிரம்பிவிட்டது. மழை பெய்யத் துவக்கிய போதிலும் ஜனக்கூட்டம் கலையவில்லை. அக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுள் முக்கியமானவர்கள்:— கனம் எஸ் முத்தையா முதலியார், கனம் டாக்டர் சுப்பராயன், சர், ஏ. பி. பாத்ரோ, திரு. ஈ. வெ. ராமசாமிநாயக்கர், திவான்பகதூர் ஜே வெங்கடநாராயண நாயுடு, திவான் பகதூர் டி. வரதராஜலு நாயுடு திவான்பகதூர் பி. பாலகுசம் நாயுடு, திவான் பகதூர் நாராணசாமி செட்டியார் ராவ்பகதூர் எம். கே. ரெட்டி, ராவ்பகதூர் ஆர். கிருஷ்ணராவ் பான்ஸ்லே, சிமான்கள் டி. எம். நாராயணசாமி பிள்ளை, எம. எல்.சி. எ. துரைசாமி முதலியார், சக்கரபாணி நாயுடு பி. ஏ. பி. எல், மணி திருநாவுக்கரசு முதலியார், பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம், சுரேந்திரநாத் ஆரியா, டாக்டர் கோவிந்தராஜ முதலியார், எஸ் பாணிநாயுடு(வேலூர்) பத்மநாப நாயுடு பி. ஏ. பி. எல். (வேலூர்) ஜி. வந்தனம், ஸ்ரீமதி வந்தனம், வெங்கடசாமி நாயுடு உள்ளப்பள்ளி ஜமீன்தார், வி' கனகசபை நாடார், சமஸ்கிருத பாடசாலைகளின் சூப்பிரண்டெண்ட் எம். ஜனார்த்தனம் நாயுடு, கே. வி. மேனன், ஜே. எஸ் கண்ணப்பர், கூடலிங்கம்பிள்ளை முனிசிபல் கவுன்சிலர் மதுரை, புன்னையப்பநாடார் முனிசிபல் கௌன்சிலர் (மதுரை) தங்கமணி நாடார் (மதுரை) டி. நாராயணசாமி பிள்ளை (மதுரை) அழகிரிசாமி செட்டியார் (கள்ளிகுடி) சுந்திர செட்டி, பி. டி. குமாரசாமி செட்டியார், தீனதயாளு முதலியார், வி. கோவிந்தசாமி செட்டியார் (வட ஆற்காடு) கே. ஏ. வேலு கவுண்டர் (வட ஆற்காடு) முசலப்ப ரெட்டியார், பிஞ்சல சுப்பிரமணியம் செட்டி ஜி. ஜே. குரேஷி சாகிப், ஒ. ஏ. வாஜித், எம். கோபால்சாமி முதலியார், சி. சங்கரமேனன், காப்டன் கிருஷ்ணன், டாக்டர் கோவிந்த பிள்ளை, கர்ந்திமதிநாத பிள்ளை, பாரிஸ்டர் சுப்பிரமணியம் (நாகை) ராவ்பகதூர் டாக்டர் சி. நடேச முதலியார் சி. தாதுலிங்க முதலியார், டி. ஏ. வி. நாதன், பி.டி. ராஜன், திவான் பகதூர் பி. சி. எதிராஜுலு நாயுடு, வர்மா, டி. நல்ல சிவம் பிள்ளை, ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத்தாயாரம்மாள் முதலானவர்களும் கணக்கிட முடியாத பல பிரபலஸ்தர்களும் உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தனர்.

### மழையிலும் கூட்டம்.

மாலை கூட்டம் துவக்கப்படுமுன்னமேயே மேகங்கள் இருண்டு மழை பெய்யத் துவக்கிவிட்டது. ஆயினும் கூட்டம் நிறுத்தாமல் துவக்கப்பட்டது.

திரு. பி. டி. ராஜன் எம். எல். சி. அவர்கள் தலைமையில் கூட்டம் துவக்கப்பட்டதும் சென்னை சர்க்கார் சுகாதார மந்திரி கனம் எஸ். முத்தையா முதலியாரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களால் ஆமோதிக்கப்பட்டு அனைவரும் எழுந்து கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"சென்னை வாசிகளின் இப்பொதுக் கூட்டம் இந்தியாவின் ஜனநாயக இயக்கத்தின் தலைவரான பானகல் அரசரின் எதிர்பாராத மரணத்தைக் குறித்துத் தனது பெருந்துக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது."

'காலஞ்சென்ற ராஜா அவர்களின்குடும்பத்தாருக்கு இக்கூட்டத்தாரின் அனுதாபத்தையும் துக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளும்படி அக்கிராசனரைக் கேட்டுக்கொள்கிறது" என்ற தீர்மானம் சென்னை சர்க்கார் முதன் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு மாஜி மந்திரி சர். ஏ பி. பாத்ரோ அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியபின் கூட்டம்

### கடற்கரைக்கு ஊர்வலமாகச்சென்றது.

இந்நிலையிலும் மழைதூரிக்கொண்டிருந்த போதிலும் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் எழும்பூரிலிருந்து ஊர்வலத்துடன் வந்த கூட்டத்ினரும் ஊக்கத்துடன் இருந்து வந்த மழையையும் பொருட்படுத்தாது ஊர்வலமாகதிருவல்லிக்கேணி கடற்கரைக்கு சென்றது. ஊர்வலத்துடன் பெருத்த ஜனக்கூட்டத்தினரும் பல தலைவர்களும் பல பெரியபெரிய உத்தியோகஸ்தர்களும் சென்றனர். ஊர்வலம் தியாகராயர் ஞாபகார்த்த நிலயத்திலிருந்து புறப்பட்டு மௌண்ட் ரோட் மூலமாக திருவல்லிக்கேணி கடற்கரைக்குச் சென்றது ஊர்வலம் செல்லும்போது வழியில் சில விடங்களில் பனகால் அரசர் படத்திற்குப் புஷ்பமாலைகள் போடப்பட்டன. ஜனங்கள் திருவிழாவுக்காக எதிர்பார்ப்பதுபோல கடற்கரையிலும்காத்திருந்தனர்.

### கடற்கரை கூட்டம்.

தியாகராயா ஞாபகார்த்த நிலயத்திலிருந்து மாலை 6.30 மணிக்குப் புறப்பட்டவர் 7-30 மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரைவந்து சேர்ந்தது கடற்கரையிலும் மழைதுவக்கிய போதிலும் ஜனக்கூட்டம் கலையாமலிருந்தது முக்கியமாய் குறிப்பிடத்தக்கது. கடற்கரையில் பனகால் அரசர் உருவப்படம் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மோட்டாரின் அருகில் பல தலைவர்களும் மற்றையோரும் மிக உருக்கமாய்ப்பேசினார்கள் அவர்களில் முக்கியமானவர்கள் திருவாளர்கள், ஈ. வெ. ராமசாமி நாயக்கர், கனம் எஸ். முத்தையா முதலியார், ஜே. எஸ். கண்ணப்பர், ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத்தாயாரம்மாள், பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம், திரு. நாராயண ரெட்டியார், திரு செங்கைய பந்தலு, எஸ். எம். ஏ. சமத்து அப்துல்கரீம் முதலியவர்கள் பேசினார்கள் கூட்டம் இரவு 8-மணிக்கு மேல் கலைந்தது.

# அன்ன சத்திரங்களின் அட்டூழியம்.

திருவானைக்காவலில், ரெங்கோன் ரெட்டியார் சத்திரத்தில் தினந்தோறும் 150 பிராமணர்களுக்கு குறையாமலும், கங்காணியார் சத்திரத்தில் 10 பிராமணர்களுக்கும், திருவாடுதுறை ஆதீனத்திலுள்ள சத்திரத்தில் 10 பிராமணர்களுக்கும், மற்றுமொரு சத்திரத்தில் 3 பிராமணர்களுக்கும் அன்னதான தர்மம் நடைபெற்றுவருவதில், ஓரிடத்திலாவது ஏழைப் பார்ப்பனரல்லாதாருக்குஉணவுகிடையாது. ஆனால் ரெட்டியார்சத்திரத்தில்தற்காலம் மிகுந்த அன்னத்தை பரதேசிகளுக்கு ஒரு அளவு பாத்திரத்தால் கொடுத்து விரட்டும் காக்ஷி வெகு சோபிதம்.

மேல்கண்ட தர்மச்சத்திரங்களின் தர்மகர்த்தாக்கள் அனைவரும் பார்ப்பனரல்லாத மக்களாக இருந்தும், தாங்கள் சிரமப்பட்டேடும் பொருளைக்கொண்டு நடத்தும் தர்ம காரியத்தில், ஒரு வகுப்பார்களுக்குமட்டும் உணவளிப்பதானது வருந்தத்தக்கதே. ஆதலின் மேல்கண்ட தர்மகர்த்தாக்கள், தங்கள் தர்ம நிலயங்களில், பார்ப்பனர்களை ஆதரிப்பதொப்ப ஏனைய எளியார்களையும், இனியாகிலும் கவனிக்க முன்வரவேணுமாய் பிரார்த்திக்கின்றோம்.

மற்றும் சிற்சில தர்மசீலர்கள் திருவானைக்காவல் ஸ்ரீ ஜம்புகேஸ்வரம் ஆலயத்தில் கட்டளைகள் ஏற்படுத்தி முற்பகலில் 2 தேசாந்திரிகளுக்கும் பிற்பகலில் 2 தேசாந்திரிகளுக்கும் பிரசாதம் வினியோகிக்க திட்டம் செய்திருக்கிறதில், ஷை தர்மப் பிரசாதங்கள் ஆலய அதிகாரவர்க்கத்தவர்களுக்கு உபயோகமாகி வருகின்றது. எவரேனும் தேசாந்திரிகள் சென்றால் பிரசாதம் ஏற்கனவே வினியோகிக்கப்பட்டாகி விட்டதாக தெரிவித்துவிடுகிறார்கள். இவ்விதமான அட்டூழியங்களை, ஷை ஆலய தர்மகர்த்தாக்களாவது கவனிக்கவேணுமாய் கோருகிறோம்; கின்றது.

ரு. வேலாயுதம்.

# 1929-ஆண்டின் "தொழிலாளி பஞ்சாங்கம்"


இஃது திருச்சினாப்பள்ளி ரயில்வே தொழிலாளர் அச்சுக்கூடத்தாரால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதில் தொழிலாளர்களுக்காகச் சிறைசென்ற 12வீரர்களின் திருவுருவப்படங்களும், தமிழ் இங்கிலீஷ் தேதிகளும், கவர்மெண்டு விடுமுறை நாட்களும் தொழிலாளர்களுக்கான எண்ணிறந்த-உள்ளத்தைக் கொள்ளை கொள்ளத்தக்க-சுயமரியாதை வாக்கியங்களும், ராகு குளிகை காலங்களும், இந்து கிறிஸ்தவ பண்டிகை முதலியவைகளும், பஞ்ச வர்ணங்களில் கண்களைக் கவரத்தக்க விதமாய் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாங்கம் ஒன்றின் விலை அணா 2 தான்- விலாசம்:—

"ரயில்வே தொழிலாளர் அச்சுக்கூடம்,
"திருச்சினாப்பள்ளி"

வாருங்கள்! வாருங்கள்!!

## சுயமரியாதை மகாநாடு

செங்கற்பட்டில் பிப்ரவரி மாதத்தின் மத்தியில் நடக்கப்போகின்றது! சைமன் கமிஷனுக்கு என்ன சொல்லுவது என்பதை அங்குதான் தீர்மானிக்கப் போகின்றது. எல்லாரும் வாருங்கள், பதினாயிரக் கணக்கான மக்கள் கூடத் தகுந்த ஆடம்பரமான பலத்த ஏற்பாடுகள் இப்பொழுதிருந்தே நடைபெற்று வருகின்றன. வரத்தவறாதீர்கள்.



ஆனம் துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
இனத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு

நபோறு விபவ-ஹு மார்கழி-மீ 16-உ.

## காங்கிரஸ் புரட்டைக் கண்டு ஏமாந்துவிடாதீர்கள்.

கல்கத்தாவில் இதுசமயம் கூடிக்கொண்டிருக்கும் காங்கிரஸ் என்னும் கூட்டம் இந்த வருஷத்திய மற்றொரு ஏமாற்றுத் திருவிழா என்றுதான் சொல்லவேண்டும். ஒவ்வொரு வருஷமும் நமது இந்தியப் பாமர மக்கள் ஆயிரக்கணக்காகக் கூட்டம் கூடுவதும் [illegible] கூட்டுக்கொள்ளை சுயநல ஆசாமிகள் சேர்ந்து இப்பாமரமக்கள் ஏமாறும்படி ஜாலவித்தைபோல் இரண்டொரு [illegible] ஆலோசனைத் தீர்மானங்கள் செய்வதும் [illegible] இதற்குள் இதுவும் இருக்கின்றது, இப்படியும் சொல்லலாம் அப்படியும் சொல்லலாம், எதினும் பொருந்தும், அதற்கு இதுவே முதற்படி, முதற்படிக்கு இதுவே முதற்படி [illegible] துபோன்ற தந்திர வார்த்தைகளால் [illegible] ளங்களை அரண் செய்வதும், வாலிபர்க[illegible] ம்பெண்களைக் காட்டி ஏமாற்றுவது[illegible] பாமர மக்களை திரு காந்தியவர்களைக்[illegible] ஏமாற்றி வருவதுமே காங்கிரஸ் நாட[illegible] த்திக்காட்டப்பட்டு வருகின்றது[illegible] போன்ற ஒரு மோசமான ஏமாற்று[illegible] விழா நமது நாட்டில் வேறு எதன்போதும் நடத்தப்படுவதாகச் சொல்ல முடியாது. பார்ப்பனர்களோ, அல்லது ஆங்கிலம் படித்து உத்தியோகத்திற்காகத் திருக்கும் படித்தவர்கள் என்பவர்களோ, அல்லது பெருமையையும் பதவியையும் அடையக்காத்திருக்கும் பணக்காரர்களோ இவ்வித நாணயப்பொறுப்பற்ற காரியங்கள் செய்வதில் நமக்கு சிறிதும் ஆச்சரியமில்லை. பார்ப்பனர்கள், படித்தவர்கள், பணக்காரர்கள் ஆகிய மூவரும் சிறப்பாக நமது நாட்டைப் பொருத்தவரையில் ஏழை மக்களுக்கும் குடியானவர்களுக்கும் எப்போதுமே எதிரிகளே ஆவார்கள். அதனாலேயேதான் முதலில் பார்ப்பன ஆதிக்கத்தை அடியோடு அழித்தெறிய வேண்டுமென்கின்றோம். அது ஒழிந்தால் அடுத்ததைச்செய்யவே நமது சுயமரியாதை இயக்கம் தோன்றியிருக்கின்றது.

மற்றபடி திரு. காந்தி, துறவி என்றும் மகாத்மா என்றும் உத்தமர் என்றும் சத்திய சீலர் என்றும் ஏழைகள் நண்பர் என்றும் அவதாரம் என்றுங்கூட சொல்லும்படியான ஒருவர், ஒருகாலத்தில் நமக்கு ஏற்பட்ட செல்வாக்கையும் நம்பிக்கையையும் இவ்வேமாற்றுத்திருவிழாவுக்கு உபயோகப்படுத்துவதைப்பற்றி நாம் கண்டிக்காமலோ பாமர ஜனங்களுக்கு எடுத்துக்காட்டாமலோ இருக்கமுடியவில்லை. நேற்றும் முன் தினமும் கல்கத்தா காங்கிரசின் அகில இந்திய காங்கிரஸ்கமிட்டி விஷயாலோசனைக் கூட்டத்தில் இரண்டுவித தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதாவது:—

"ராஜீய சமூக பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கு சர்வகக்ஷி மகாநாட்டுத் தீர்மானம் உதவியாயிருப்பதால் அதைப் பாராட்டுகின்றது"

"சென்னை காங்கிரசில் பூரண சுயேச்சைதான் நமது லக்ஷியம் என்று தீர்மானித்திருப்பதைபின்பற்ற சம்மதித்து"

"காலதேசவர்த்தமானத்திற்கு ஏற்றபடி மாற்றிக்கொள்ளும் அதிகாரத்தோடும் பிரிட்டிஷார் ஒப்புக்கொள்ளுவதைப் பொருத்தும் இந்த காங்கிரஸ் நேரு ரிப்போர்ட்டில்கண்ட அரசியல் திட்டத்தை ஒப்புக்கொள்ளுகின்றது"

"இதை பிரிட்டிஷார் 2 வருஷ வாய்தாவுக்குள் ஒப்புக்கொண்டு அதன்படி சீர்திருத்தம் கொடாவிட்டால் பலாத்காரமற்றதன்மையில் வரிகொடாமை உள்ளிட்டதல் முதலிய ஒத்துழையாமைசெய்வது"

என்பதாகும்.

இது திரு காந்தியால் பிரேரேபிக்கப்பட்டு திரு சீனிவாசய்யங்காரால் ஆமோதிக்கப்பட்டு 3ல் 2 பங்கு பேர்களால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது

சுயேச்சைக் கொள்கையின் மூல புருஷர்களான திரு ஐயங்காரால் நேருவும் சுபாஷ் சந்திர போஸும் அவர்களது நண்பர்களும் கூட்டத்திற்கு வரவில்லை

இந்த தீர்மானத்தை பிரேரேபித்த திரு காந்தியவர்களின் யோக்கியதையை முதலில் கவனிப்போம்-

அத்தீர்மானத்தில் மூன்று விஷயத்தை முக்கிய விஷயமாய் எடுத்துக் கொள்ளுவோம். அதாவது,

முதலாவது, பூரண சுயேச்சைத் தீர்மானத்தை பின்பற்றுவதாய் சம்மதித்தது,

இரண்டாவது நேருகமிட்டி அறிக்கையை ஒப்புக்கொள்ளுவது,

மூன்றாவது, இரண்டு வருஷத்தில் நேரு அறிக்கைப்படி சர்க்கார் சுயராஜ்யம்கொடாவிட்டால் ஒத்துழையாமை செய்வது.

திரு. காந்தி சென்ற வருஷத்திய சென்னை காங்கிரசிற்கு வந்திருந்தும் சில சிஷ்யர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு பூரண சுயேச்சைத் தீர்மானத்தை எதிர்க்காமல் தாராளமாய் நிறைவேற்ற விட்டு விட்டு, காங்கிரஸ் முடிந்து நாலைந்துநாள் பொறுத்து அத்தீர்மானத்தை "விளையாட்டுப் பிள்ளைத்தனம்" என்று தனது "யங் இந்தியா" வில் எழுதி பரிகாசமும் செய்து விட்டு இப்போது கொஞ்சமும் பொறுப்பும் கவலையும் இல்லாமல் பூரண சுயேச்சைத் தீர்மானத்தை தான் பின்பற்ற சம்மதித்திருப்பதாய் சொல்லுவது நாணயமாகுமா என்று கேட்கின்றோம்.

இரண்டாவது,

ஜாதிவகுப்புச் சச்சரவுகளும் ஜாதி உயர்வு தாழ்வுக்கொடுமைகளும் தீர்ப்பதற்கு யோக்கியமான முறைகள் ஒன்றும்இல்லாத நிலையில் புதிய சீர்திருத்தத்தை கேட்பது பொறுப்புள்ள அரசியல் வாதிக்கோ பொது நலவாதிக்கோ யோக்கியமான காரியமாகுமா என்று கேட்கின்றோம்.

எனினும், திரு காந்தியவர்கள், நேருதிட்டத்தில் கண்ட பரிகாரங்களை ஜாதி வகுப்பு ஒற்றுமைக்கும் கொடுமைகள் ஒழிவதற்கும் போதுமானது என்று மனப்பூர்வமாய் தன் மனசாக்ஷி அறிய நம்புகின்றாரா என்று கேட்கின்றோம்.

மூன்றாவதானது,

ஒத்துழையாமைப் பூச்சாண்டி.

அதாவது, 2 வருஷத்திற்குள் சர்க்கார் நேரு திட்டத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் ஒத்துழையாமை செய்வேன் என்பது. இதில் எவ்வளவு ஏமாற்றுதல்கள் நிறைந்திருக்கின்றன என்பதை வாசகர்கள்தான் உணரவேண்டும். மறுபடியும் ஒத்துழையாமை செய்வேன் என்று சொல்லும் திரு.காந்தி முன் ஏன் ஒத்துழையாமையை நிறுத்தினார் என்பதற்கு யாராவது [illegible] சொல்ல முடியுமா? இவரை நம்பி ஒரு கோடி ரூபாயும் கொடுத்து முப்பது ஆயிரம் பேர் 1, 2, 3, 4 தடவைகள் ஜெயிலுக்கும் போய் அவரவர்கள் பிழைப்பு, வாழ்வு, பதவி, முதலியவைகளைக் கூட விட்டுவிட்டு இவர் பின் திரிந்தார்களே, அந்தச்சமயத்தில் ஏன் நிறுத்தினார்? இப்போது அதைவிட நல்ல சமயமா? அல்லது இரண்டு வருஷமாகி விட்டால் தயாராகிவிடுமா? என்னென்னத்தைக்கொண்டு இந்த தீர்மானத்தை பிரேரேபித்தார்? சற்றும் பொறுப்பும் கவலையும் இல்லாமல் மற்ற பித்தலாட்டக்காரர்கள் சொல்லுகிறபடி ஆடியிருக்கின்றார் என்பதைத்தவிர வேறுஎன்ன சொல்ல முடியும்?

அதிலும் "பலாத்காரமற்ற ஒத்துழையாமை" என்று பேசியிருப்பது வெறும் கேலிக்கூத்தும் முன்னுக்குப் பின் முரணானதுமாகுமென்றே சொல்லுவோம். ஏனெனில் முன் ஒத்துழையாமையை நிறுத்தினதற்கு காரணம் சௌரி சௌரா கொலை

என்றே குறிப்பிட்டுவிட்டார். இப்போதும் கல்கத்தா காங்கிரஸில்பேசுவதற்கு இரண்டொரு மணி நேரத்திற்கு முன்பு தமது "யங் இந்தியா" பத்திரிகையில் "நமது தேசத்தில்பலாத்காரம் என்பது காற்றைப்போல் எங்கும் நிறைந்து கிடக்கின்றது" என்று எழுதியிருக்கின்றார். அந்த இங்கிகூட இன்னம் காயவில்லை, அதற்குள் தான் மறுபடியும் பலாத்காரமற்ற ஒத்துழையாமை செய்யப்போவதாய் மிரட்டுவது கேலிக்கூத்தும் நாணயமற்றதும் ஆகும் என்று சொல்லவேண்டியதோடு நாம் (காந்தி ஜீ) முன் சென்னைத் தீர்மானத்தைப்பற்றிச்சொன்னது போல்இத்தீர்மானங்களையும் விளையாட்டுப்பிள்ளைகள் கூடிச்செய்யும்வெறும்பேச்சுக்குச்சமானமானவை என்றுகூட சொல்லலாமா வேண்டாமா என்று கேட்கின்றோம். திரு. காந்தி சைமன் கமீஷன் பகிஷ்காரத்தில் ஏற்படும் பலாத்காரச் செய்கைகளையும் சமீபத்தில், சஞ்சாப்பில் நடந்த படுகொலைகளையும் தெரிந்து இப்படிச்சொன்னாரா அல்லது இவ்விரண்டும் அவருக்கு எட்டாமலே சொன்னாரா? என்பதை யோசித்தால், திரு.காந்தியின் பலாத்காரமற்ற தன்மைக்கு அர்த்தம் விளங்காமல் போகாது.

திருவாளர்கள் சத்தியமூர்த்திகளும், ஸ்ரீனிவாசய்யங்கார்களும், குப்புசாமிகளும், வரதராஜுலுக்களும், நேருக்களும், மாளவியாக்களும், ரங்கசாமி அய்யங்கார்களும், ராஜகோபாலாச்சாரிகளும்போன்றவர்கள் பேசுவதைப்பற்றியோ நடந்துகொள்வதைப்பற்றியோ நாம் இவ்வளவு முக்கிய ஸ்தானம் கொடுத்து சமாதானம் சொல்லவேண்டுவதில்லை. திரு காந்தி போன்றவர்கள், அதாவது ஏதாவது ஒரு விதத்தில் மக்களின் செல்வாக்குப் பெற்றவர்கள் இப்படி- அதாவது தாங்கள் பேசுவதால் என்ன நேரிடும் என்பதைக் கவனியாமல் "பிடித்தவனுக்கெல்லாம் பெண்டாட்டி" என்பது போல் யார் என்னசொன்னாலும் கிளிப்பிள்ளையைப்போல்—சொல்லிக்கொடுத்ததை சொல்லிவிடுவதென்றால், அது மக்களுக்கு எவ்வளவு ஆபத்தை உண்டாக்கிவிடுகின்றது என்பதை கவனித்தால் நமக்கு ஆத்திரமாக இருக்கின்றது.

சாத்வீகத்திலாவது, தீண்டாமை ஒழிப்பதிலாவது, ஒடுக்கப்பட்ட—தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட—மக்களின் கஷ்டத்தை நிவர்த்திப்பதிலாவது, திரு காந்திக்கு 4, 5 வருஷமாய் ஒருகடுகளவு கவலையாவது இருக்கின்றதென்று யாராவது சொல்லமுடியுமாவென்று கேட்கின்றோம். தென்னாட்டுக்கு வந்து 3 லக்ஷம் ரூபாய் கொள்ளையடித்து அதை பார்ப்பனர்களுக்கு பாதகாணிக்கை வைத்துவிட்டுப் போய்விட்டார். அது நம் பார்ப்பனர்களின் தேர்தல் பிரசாரத்திற்கும் ஆதிக்கத்திற்கும் கதரின் பேரால் செலவாகின்றது. அன்றியும் அது ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் புகுந்து பார்ப்பனரல்லாதார்களுக்குக் கெடுதியை செய்துகொண்டுவருகின்றது. இவற்றையெல்லாம் அவரது நேரில் எல்லோரும் சொன்னார்கள். சற்றும் கவனிக்காமல், வந்ததை வாரப்பற்றுவதிலேயே கவலையாய் இருந்துவிட்டார். தீண்டாமையைப்பற்றி கனவிலும் நினைப்பதில்லை. யாதொருபிரசாரமும் செய்தவருமல்ல. சமத்துவத்திற்காவது சமசந்தர்ப்பத்திற்காவது அப்பக்கங்களில் தலைவைத்துக்கூட படுத்தவர் அல்ல. எப்படியாவது அவரை மகாத்மா என்று சொல்லிக்கொண்டு ஒரு கூட்டம் தமது மடத்தில் வயிறுவளர்ப்பதே அவருக்கு திருப்திபோல் காணப்படுகின்றது.

எனவே, காங்கிரஸ் தீர்மானம் என்பது பித்தலாட்ட தீர்மானமாயிருப்பது வழக்கமானாலும் திரு காந்தி அவர்களும் இவற்றில் இவ்வளவு நேரடியாய் பங்கெடுத்துக்கொள்வதென்பது சற்றும் சகிக்கக்கூடியதல்லவென்பதற்காகவே இவ்வளவு எழுதினோம். எந்தக்காரணத்தைக்கொண்டும் நமது மக்கள் இனி 'ஒத்துழையாமை', 'பூரண சுயேச்சை' என்கின்ற நாடகங்களில் கலந்துகொள்வது இதுசமயம் சிறப்பாக பார்ப்பனரல்லாத மக்களுக்கு தற்கொலையாகவே முடியும். காலம் சென்ற ஒத்துழையாமையின் பயனும் ஏற்பட்டவில்லை இன்னமும் நமது நாட்டு மக்களின் மானத்தையும் நாணயத்தையும் பாழ்படுத்திக்கொண்டிருக்கின்றது. ஆனாலும் ஒத்துழையாமையின் தலைவர்களும் சிஷ்யர்களும் மாத்திரம் இன்னமும் மடாதிபதிகளாகவும் மடத்தாண்டிகளாகவும் பெருமையும் பிழைப்பும் பெற்று வாழ்கின்றார்கள்.

எனவே கடைசியாக பார்ப்பனரல்லாத மக்களுக்கு, சிறப்பாக தாழ்த்தப்பட்ட-ஒடுக்கப்பட்ட, விலக்கப்பட்ட தீண்டப்படாத மக்களுக்கு நாம் சொல்வது; யாதெனில், சைமன் கமீஷனிடம் நமது நிலைமையை ஒளிக்காமல் யோக்கியமான முறையில் உள்ளது உள்ளபடி தெரிவித்துவிடவேண்டியதுதான், இந்தியா மந்திரியும் சைமன்கமிஷனும் பார்லிமெண்டும் நமது நிலைமையை உணர்ந்துவிட்டார்கள் என்பதாக நாம் சந்தேகமற அறிந்த பிறகு அவர்கள் இதற்குத்தக்க பரிகாரம் செய்யவில்லை என்பது நமக்கு தீர்மானமாகத் தெரிந்துவிட்டால், அதன்பிறகு காங்கிரசும் திரு. காந்தியும் செய்யும் ஒத்துழையாமை இந்தசர்க்காரை ஆட்டுமா? அல்லது நமது இயக்கம் செய்யும் ஒத்துழையாமை இந்த சர்க்காரை ஆட்டுமா என்பது சற்று பொறுமையோடு இருந்து பார்க்க வேண்டிய விஷயமாகும்.

முடிவாக சர்க்காருக்கு நாம் செய்யும் எச்சரிக்கை என்னவென்றால், இந்த ஜால வேடிக்கைத் தீர்மானத்தை மதித்தோ அல்லது அந்தமாதிரி ஒருபொறுப்பும் கவலையும் நாணயமும் அற்ற சுயநலக்கூட்டத்தை எப்படியாவது கைக்குள் போட்டுக்கொண்டால் இன்னமும் கொடுமையான முறை வைத்து நாட்டைச்சுரண்டி கொள்ளையடித்துக் கொண்டிருக்கலாமென்றோ சர்க்கார் மனப்பால் குடிப்பார்களானால் அதைப்போன்ற ஒரு முடிவு காலம் அவர்களுக்கு வேறு இருக்காது என்றே சொல்லுவோம். காங்கிரஸ், உத்தியோகத்திற்கும் மற்றவர்களை அமுத்திவைப்பதற்கும் ஆசைப்பட்டு பயங்காளித்தனமான தந்திரங்கள் செய்கின்றது. அவர்கள் தோற்றால் அவர்கள் பிழைப்புக்கு பிச்சை எடுக்கும் தொழில் இருக்கின்றது. ஆனால் நமதியக்கமோ அப்படிக்கில்லாமல் சுயமரியாதையையும் சமத்துவத்தையும் சமசுதந்திரத்தையும்லக்ஷியமாகக்கொண்டு யோக்கியமான முறையில் வெளிப்படையாக வேலைசெய்யத் தீர்மானம் செய்துகொண்டிருக்கின்றது. இந்த நிலையில் நமதியக்கம் தோற்றால் ஒருகை பார்த்து உயிர்விடுவதை விட வேறு வழியில்லை என்பதை சர்க்காருக்கு நண்பர் முறையில் தெரிவிக்கின்றோம்!

## பார்ப்பனரல்லாதார் கவனிக்கவேண்டிய விஷயம்.

நமது தலைவர் பனகால் அரசர் காலமான பிறகு கக்ஷி நிலையைப்பற்றிய உண்மைகளை பார்ப்பனரல்லாத மக்கள் எல்லோரும் உணர்ந்திருக்கவேண்டியது அவசியமாகும்.

தலைவர் பட்டத்திற்கு யார் வருவது என்பது பற்றிய யோசனை ஒவ்வொருவர் மனதிலும் ஊசலாடுவது அதிசயமல்ல.

சில பிரமுகர்கள் தாங்கள் தலைவராகவேண்டும் என்று ஆசைப்படுவதிலும் அதிசயமொன்றுமில்லை. அவரவர்களுக்கு வேண்டிய நண்பர்களை தலைவராக்க முயற்சிப்பதிலும் அதிசயமொன்றுமில்லை.

ஆனால் நமக்கு இப்போது அவசரமாய் ஆகவேண்டிய காரியமென்னவென்றால், "ஜஸ்டிஸ்" "திராவிடன்" பத்திரிகைகள் நடக்க வேண்டும், ஆங்காங்கு இயக்க பிரசாரங்களும் ஸ்தாபனங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பவே.

தற்காலம் "ஜஸ்டிஸ்" "திராவிடன்" கட்டடத்தின் மீதுள்ள 75000 ரூ. கடன் தீர்க்கப்பட வேண்டும் இது ஒரு விதத்தில் முடிவுபெற்றாலொழிய அடுத்து வரும் தேர்தலில் நாம் நிலைகொள்ள முடியாது என்பது நிச்சயம். அது மாத்திரமல்லாமல் நமது ஸ்தாபனமும் செல்வாக்கோடு இருக்க முடியாமல் போய்விடும் என்று கூடச் சொல்லுவோம். திரு காந்திக்கும் காங்கிரசுக்கும் இன்றைய தினம் ஏதாவது செல்வாக்கு இருக்குமானால் அது அவரவர்களிடம் உள்ள பணச்செல்வாக்கே ஒழிய கொள்கை செல்வாக்கென்றோ நாணயச்செல்வாக்கென்றோ அடியோடு சொல்லிவிட முடியாது. அதுபோலவே நமது இயக்கமும், கொள்கையின் யோக்கியதையையும் நாணயத்தின் பெருமையையும்மாத்திரம் கவனித்துக் கொண்டிருந்தால் ஒரு காரியமும் ஆகி விடாது. ஒற்றுமையும் கட்டுப்பாடும் இருந்தால் நமக்குப்பணம் கிடைப்பது ஒரு அதிசயமல்ல. சென்றவருஷம் மாத்திரம் கதரின் பேரால் 3 லக்ஷம் அழுதோம். காங்கிரசின் பேரால் பல லக்ஷம் தொலைத்தோம். இன்னமும் சங்கராச்சாரிகளின் கொள்ளையால் வருஷத்துக்கு 10, 20 ஆயிரங்கள் பாழாகின்றன. மற்றும் சாவு, சடங்கு, உற்சவம், வேண்டுதலை முதலியவைகளின்பேரால் பல பல லக்ஷம்வீணாகின்றது.

எனவே நமது நாட்டில் பணமும் கொடுக்கும் தாராளதன்மையும்இல்லை என்று சொல்லிவிடமுடியாது. ஆனால் அதை எப்படி

உபயோகப்படுத்துவது என்பதற்கான புத்தி மாத்திரம் நம்மவர்களுக்கு இல்லை என்பதைச்சொல்லி ஆகவேண்டியிருப்பதுடன் அதையாரும் கற்பிக்க முயற்சிசெய்யவில்லை என்கின்ற குற்றத்தையும் ஒப்புக்கொண்டாகவேண்டும்,

முதலாவது நமது கக்ஷியில் ஒற்றுமைக்கும் கட்டுப்பாட்டிற்கும் விரோதமாய் உள்ள அபிப்பிராய பேதங்கள் என்ன என்பதை யாராவது சொல்லமுடியுமா? தங்கள் தங்கள் உத்தியோகம் பெறுவது, பதவி பெறுவது ஆதிக்கம் பெறுவது என்பதினால் ஏற்படும் சொந்த அபிப்பிராயபேதமல்லாமல் பொது கொள்கைகளில் யாருக்கும் அபிப்பிராய பேதம் உண்மையில் இல்லையென்றே சொல்லுவோம்.

ஆதலால் இனி அவ்வித அபிப்பிராய பேதத்தை அடியோடு ஒழித்தாலொழிய கக்ஷி நிலைப்பதோ அல்லது அது பொது ஜனங்களுக்கு உபயோகமாகும் என்பதோ கவலைப்படத்தக்கதாகிவிடும். நாம்பார்ப்பனரல்லாதார்கட்சி என்பதை அரசியலோடு பொருத்தாமல் இருப்பது குழப்பத்திற்கிடமில்லாததாகவிருக்குமென்று அபிப்பிராயபபடுகின்றோம். ஆனால் உத்தியோகங்கள் பதவிகள் எல்லாம் நமது மக்களின் சுயமரியாதையையும் சமத்துவத்தையும் சமசுதந்தரத்தையும் உத்தேசித்து கூடுமானவரை கைப்பற்றத்தக்க திட்டங்களையும் வகுத்துக்கொண்டு அதற்கும் சரியான முக்கிய ஸ்தானம் கொடுத்துவிடவேண்டும். ஏனெனில் அரசியல் என்பது அர்த்தமற்றதும் பித்தலாட்டமானதும் ஆகும் என்பதே நமது அபிப்பிராயம்.

வெள்ளைக்காரர்களை நமது நாட்டைவிட்டு ஓட்டுவதாயிருந்தால் அவர்கள் போய்விட்ட பிறகு எல்லாத்தன்மைகளும் மக்கள் யாவருக்கும் பொதுவானதாகயிருக்க வேண்டும். அப்படிக்கில்லாவிட்டால் வெள்ளைக்காரர்கள் போனபிறகு இன்னது செய்வது என்று தெரியாமல் திண்டாடுவதோ அல்லது வேறு ஒரு கொள்ளைக்காரனோ கொடுமைக்காரனோ சள்ளைக்காரனோ ஆளுவதாயிருந்தால் வெள்ளைக்காரனை நிறுத்திவைப்பதே மேலானதாகும்.

அன்றியும் வெள்ளைக்காரனிடம் உள்ள உத்தியோகங்களைப் பற்றியதானாலும், அதுவும் அது போலவே எல்லோரும் சமத்துவமுடனும் சம சந்தர்ப்பத்துடனும் அனுபவிக்க செய்வதானால் மாத்திரம் தான் அதில் நாம் சேர்ந்துழைக்கலாம், அதற்கு மக்களையும் தயார் செய்யலாம். அப்படிக்கில்லாமல் வெள்ளைக்காரனிடமிருந்து பிடுங்கி ஒரு வகுப்பார் மாத்திரம் அனுபவிப்பதாயிருக்குமானால் அதைவிட அவ்வுத்தியோகம் வெள்ளைக்காரனிடத்திலேயே இருந்துவிடுவதால் ஒன்றும் மூழ்கிப் போய்விடாது. ஆதலால் இச்சமயம் நமது லட்சியம், சுயமரியாதை, சமூகசமத்துவம், சமசுதந்தரம் என்பவைகளையே முக்கியமாய்க்கொண்டு அதற்காகவே ஒவ்வொரு திட்டமும் வகுக்கவேண்டும் என்பதேயாகும்.

ஆதலால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் அரசியல் என்பதைக் கொண்டுவந்து புகுத்தாமல் இருக்க வேண்டிக்கொள்ளுகின்றோம். ஏன் இதை எழுதுகின்றோம் என்றால், சிலருக்கு நமது இயக்கத்தில் சேருவதற்கு "மற்றக் கொள்கைகள்" ஒப்புக்கொள்ள முடிவதில்லையாம், அதை விளக்கவும் நமது இயக்க வாலிபர்கள் அரசியல்காரர்கள் என்பவர்களால் ஏமாறாமலிருக்கவுமே இதை எழுதுகின்றோம்,

## பார்ப்பனரல்லாதார் இயக்கக்கூட்டம்.

27—12—28 வியாழக்கிழமை மாலையில் சென்னை தியாகராய ஞாபகக் கட்டிடத்தில் தற்கால நிலைமையைப்பற்றி யோசிக்க ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அநேகமாக பார்ப்பனரல்லாத பிரமுகர்கள், மந்திரி கக்ஷியார், டாக்டர் நடேச முதலியார் கட்சியார் ஆகியவர்களும் வந்திருந்தார்கள். வெளியூரிலிருந்து வரக்கூடாத சில பிரமுகர்கள் தவிர மற்றவர்கள் பெருங்கூட்டமாக வந்திருந்தார்கள். திரு. பி. டி. ராஜன் அவர்கள் தலைமையில் திருவாளர்கள் மார்த்தாண்ட பிள்ளை, டாக்டர் சுப்பராயன், சர் பாத்ரோ, டாக்டர் நடேசன் முனிசாமி நாயுடு, ஈ. வெ. ராமசாமி நாயக்கர், மதுரை பிள்ளை முதலியவர்கள் பேசினார்கள்.

முடிவாக வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும் சமூக சமத்துவத்தையும் ஒப்புக்கொள்ளும் பார்ப்பனரல்லாதார் எல்லோரும் ஒன்று சேருவதற்கு உள்ள தடைகள் ஏதாவதிருந்தால் அவற்றையும் அதற்கு பரிகாரங்களையும் கண்டுபிடிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அதாவது டாக்டர் நடேசன் கட்சிக்கு மூவரும் டாக்டர் சுப்பாராயன் கட்சிக்கு மூவரும், சாதாரண ஜஸ்டிஸ் கட்சிக்கு மூவரும், அக்கிராசனரும் காரியதரிசியும்கொண்ட கமிட்டி ஒன்று ஏற்படுத்த ஒப்புக்கொண்டது. பெயர்கள் அந்தந்த கட்சியாரால் ஒரு வாரத்தில் வெளிப்படுத்தப்படும்.

மற்றும் பத்திரிகைகள் விஷயமாகவும் பொருளாதார விஷயமாகவும் யோசிக்கப்பட்டது. சீக்கிரத்தில் ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் வேலைகள் நடத்தத்தகுந்த அறிகுறிகள் காணப்பட்டன. ஒரு நிருபர்.

### வட ஆற்காடு ஜில்லா முதல் பிராமணரல்லாத வாலிபர் மகாநாடு,

வேலூரில் 1929-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4, 5-ந் தேதிகளில் இம்மகாநாடு நடைபெறும்.

திருவாளர் கே. வி. மேனன் தலைமை வகிப்பார்; திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் மகாநாட்டைத்திறந்து வைப்பார்

திருவாளர் ராவ்பகதூர் எம். கே. செட்டி பி. எ. அவர்கள் கொடியேற்றுவார்.

திருவாளர்கள் "ரிவோல்ட்" ஆசிரியர் எஸ். ராமநாதன் எம். எ. பி. எல்., 'திராவிடன்' ஆசிரியர் ஜே. எஸ். கண்ணப்பர், ராமநாதபுரம் ஜில்லா சபைத்தலைவர் சௌந்திரபாண்டியநாடார் முதலியவர்களும் விஜயம் செய்வார்கள்.

வி. எஸ். பத்மநாப முதலியார், பி. எ. பி. எல்.
வரவேற்புக் கமிட்டித் தலைவர்.

### மெச்சத்தக்கது.

பினாங்கு கோலப்பிரை தமிழர்கள் நிறைந்த இடம். இதைப் போல் சாதி இறுமாப்புக்கொண்டவர்கள் நிறைந்துள்ள இடம் இப்பக்கங்களில் கிடையாது. இவ்விடத்தில் திரு. நமசிவாயம் அவர்களால் ஒரு தமிழ்ப்பாடசாலை திறக்கப்பட்டு திரு. நாயக்கர் கொள்கையுடைய உபாத்தியாயர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்பாடசாலையில் சாதி இறுமாப்புக்கொண்டவர்களின் பிள்ளைகள் தனி இடம் பெற முடியாது. 16—12—28ல் இப்பாடசாலையின் மூன்றாவது ஆண்டின் நிறைவு விழா கொண்டாடப்பட்டது. சுமார் 350 ஜனங்கள் வரை விஜயம் செய்திருந்தனர். "வைக்கம் வீரன் அல்லது தீண்டாமை வழக்கு" என்னும் ஓர் சரித்திரம் நடிக்கப்பெற்றது. நான்கு சிறுமிகள் நியாயாதிபதியாகவும் நியாயவாதிகளாகவும் வைக்கம் வீரனாகவும் வேடம் தரித்து, சாதி இறுமாப்புக்கொண்ட வைதிகர்களுக்கு நன்கு புத்தி கற்பித்தது மெச்சத்தக்கதும் ஆச்சரியப்படத்தக்கதுமாகும். இப் பாடசாலை உபாத்தியாயரின் கொள்கையை எம்மனமாரப்போற்றுகின்றோம். K. A. பண்டிதர், பினாங்.

### தென்னிந்தியசெங்குந்தர் முதலாவது மகாநாடு.

இம்மகாநாடு அடுத்த தை மாதம் 7, 8 தேதி (1929 ஜனவரி 19, 20 தேதி) சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஈரோட்டில் நடைபெறும்.

மகாநாட்டுப் பந்தலில் தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு, செங்குந்த வர்த்தகர் மகாநாடு, செங்குந்தவாலிபர் மகாநாடு ஆக மூன்றுமகாநாடுகள் நடைபெறும். இவற்றிற்கு முறையே கோயமுத்தூர் பிரபல வியாபாரி திரு V S செங்கோட்டையமுதலியார், திருச்செங்கோடு ஜில்லா போர்டு அங்கத்தினர் திரு. T R கந்தப்ப முதலியார். ஈரோடு திரு. N. M. சண்முகசுந்தர முதலியார் ஆக மூவரும் வரவேற்புக் கமிட்டித்தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர், மகாநாட்டுப் பந்தலையடுத்து விவசாயம், கைத்தொழில், வர்த்தக சம்மந்தமான கண்காட்சி யொன்றும் திறந்து வைக்கப்படும்.

மற்ற விபரங்கள் அடுத்தவாரம் வெளிவரும்,

### பனகால் அரசருக்கு கரூர் நகர சபையின் அநுதாபம்.

"சென்னை மாகாணத்தின் முதல் மந்திரியாயிருந்து ஸ்தல ஸ்தாபனங்களுக்கு பல நன்மைகளைச்செய்த கனம் பனகால் அரசரின் எதிர்பாராத மரணத்தைக்குறித்து இச்சபை மிகவும் வருந்துவதுடன் தன் ஆழ்ந்த அநுதாபத்தையும் திரு அரசாது குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறது" என்று 22-12-28ல் இவ்வூர் நகரசபையில் ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ஒரு நிருபர்.

(6ம் பக்கத்தொடர்ச்சி.)

தத்தளிக்கப் பிரிந்தனையே தருராம
ராயநிங்க தரும வானே! 4
மாதவனும் தியாகனும்போய் மறைந்ததுயர்க்
கடலினுக்கோர் புணையாய்த் தோன்றி
வேதனைசேர் மக்களெலாம் வேகமுடன்
கரையேறும் வகையே செய்த
மாதவமே! பனகாலின் மாநிதியே
நெருக்கடியிற் பிரிந்தாய் இந்நாள்
தீதகற்றி நெறிகாட்டும் தலைவரின்று
காணுமல் திகைக்கின் றேமே! 5

பண்டிதர், எல். இராமசாமி நாயுடு.

---

திருவார் சென்னை யாசியலில் திறலார் தலைமை யமைச்சாக
இருகா லாறுண் டாசோம்பி இதமே புரிந்த மன்னு! நின்
னுருவார் பூதவுடனீத்த வுரைகேட் டிடியி னொலிகேட்ட
வாவே யனைய திகிலுற்றே மாறாத் துயர்க்குள்ளானேமே (1)
அந்நா ளெமக்குத் தலைமை வகித்தறப்போர் நிகழ்த்திப்
புகழ்பூண்ட
தன்னேர் தியாகர் தமையிழந்த தனிவெந் துயரந் தணிகில்லோ
மென்னு விடிமே லிடிவிழ்ந்த தெனவே யிந்நாளுமைக் கவர்ந்தா
னன்னு வளியில் கொடுங்காலனுட்சி கொடிது கொடிதன்றே (2)
கல்வி வளத்தால் செல்வத்தால் கனிந்த ராஜ தந்திரத்தால்
தெவ்வர் தம்மை யறிந்தடக்குந் திறத்தா லுயர்வு மொப்பு மிலாச்
செவ்விபாசே! யுமையிழந்த செயலாற் பகைஞர் படுசூழ்ச்சிப்
பவ்வங் கடக்கும் புணையிழந்தோம் பார்க்கி லெமது
வினைகொடிதே (3)
நாயர் தம்மை யிழந்ததுயர் நலியா தாற்ற நம் த்யாக
ராயர் தம்மை யுடைத்தானேம் ராயர் தம்மை யிழந்த துயர்
மாய வுமை யாம் பெற்றிருந்தோம் மன்னு! வுமையா மின்றிழந்த
தாய துயா மாற்றுதற்கே யான பற்றென் றில்லாமே. (4)
பைந்தா தளைந்த மலர்த்தாராய்! பனகா லாசே! பாரியனே!
சிந்தா மணியே! சீமானே! சீரா ரிந்த மதம் பிழைக்க
நந்தா நீதி வருந்த புகழ் நன்று சாலுமென நினைந்தோ
வந்தா ரணி சீத் தும்பருல கடைந்தா யுரையா யண்ணுவோ. (5)
பிறப்பா லுயர்வு தாழ்வென்றே பேசுங் கொடுமை யொழிந்
தறிவின்
சிறப்பா லாறுஞ் சமமென்றே தெரிந்தே நீதிக் கொடிதாங்கி
யறப்போர் நிகழ்த்தி விண்ணுற்ற அடலே றனையாய்! நுஞ்சேவை
மறப்போ மல்லோம் நுங்கீர்த்தி மாறுந் தகைத்தோ
மகிதலத்தே. (6)

ப. வீரப்பதஞ்சைராயர்.

---

[அறுசீர்க்கழில் நெடிலடி யாசிரிய விருத்தம்]

அந்தோ வென் செய்வமினி முடிசூடா நாசபுரி வண்ணலென்னும்
சிந்தாத புகழமைந்த பானகலம் பதியிலுறை சீரார் வள்ளால்
வந்தாலே விடுவமென வழைத்தனரோ ஈசனுற்ற வானோரெல்லாம்
சொந்தாலெனித்தியர்க ளெனவெண்ணி யகன்றனையோ நவலுவாயே (1)
மாற்றார்க்கோர் சிங்கமென மண்ணிலவதரித் தினி மாண்பு வாய்ந்து
போற்றுரு மகத்திலுன்னி போந்தமிசை யுடையாசே புவி விடுத்து
வற்றாலு மும்பருனைச் செலத்தகுமோ நீதியிதோ வெங்களுக்கார்
தேற்றியினி யஞ்சலென வுரைத்திடு வரிலையோகொல் செப்புவாயே (2)
அறவிலைய பாதுகாப் பெனுஞ்சட்டம் நிலைத்திருப்ப வையநீ செய்
திறமைதனை யென்சொல்வோம் நினையிழந்து மதிமயங்கி
திகைக்கின் றேங்கொல்
குறைநிகழ்ந்த போதெங்கு சென்றதனை கூசாமற் கூறுவோமால்
நிறைகல்விக் கடலேநின் திருமுகத்தை க் காண்பதென்றே
நிகழ்த்துவாயே (3)
நடுநாட்டின் நாயகமாய் விளங்கிவந்த பனகாலே நாங்கள்வாட
விடமாட்டா யென்றிருந்தோ மென்செய்வோம் தனியரசே
விண்ணிற்செல்லும்
திடநாட்டம் வைத்திருந்த ரகசியத்தை யிதுகாறும் தெரிந்தோமில்லை
மடமோட்டிக் கண்விழிக்கச் செய்தரு ணக்குன்றேநீ மறையலாமோ (4)
நாயரிறந் திட்டதுயர் நீங்குமுனஞ் சென்னை நகர் வதிபுந்தியாக
ராயரையு மிழந்திட்டோ மெனமாற்றார் குதுஉகலித்து நகைக்கலுற்றார்
தூயபனகாலரசே நின்றனையு மிழந்ததற்கென் சொல்லமாட்டார்
ஆயனினக்கிட் டவைய திவ்வளவு தானுநீ யறைகுவாயே. (5)

வேளக்கிழார் க. அருணாசலனார்.

---

## ஆதிதிராவிடர்களும் விதவைகளும்

ஆதிதிராவிடர்களுள், அம்மப்பறையர், அதாவது சோளியப்பறையர் என்று ஒரு ஜாதியார் இருக்கிறார்கள். இவர்கள் குலத்தில் பிறக்கும் பெண்கள் புருஷன் இறந்துவிட்டால் வேறு புருஷனை மணம் செய்துகொள்ளுகிற வழக்கம் இல்லை யென்றும் அதனால் இவர்கள் ஆதிதிராவிடர்களுக்குள்ளேயே உயர்ந்த குலத்தோர் என்றும் பிதற்றித்திரிகின்றனர். இந்த "உயர்ந்த குலத்தவர்" களுடைய ஒழுங்கு பின் வருமாறு:-

சிக்கத்தம்பூர் என்னும் கிராமத்தில், ஆதிதிராவிட சோளியர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களில், புருஷனையிழந்து 6, 7 வருஷமான ஒரு விதவைப்பெண் ஷை யூரில் சுமார் இரண்டு வருஷமாக ஒரு ஆதிதிராவிடரோடு நேசமாய் இருந்தாள். ஷை விதவையினுடைய மகன் சுமார் 16 வயதுள்ள சிறுவன் தன்னுடைய தாயின் நடத்தை சரியில்லை என்று தன்னுடைய சிற்றப்பன் மார்களிடம் சொல்லி ஷை விதவையை அடித்து மிரட்டி அக்கிரமம் செய்ததினிமித்தம் இந்த விதவை தன் சிநேகனை அழைத்துக் கொண்டு பொள்ளாச்சிமலைக்குச் சென்று சுமார் 40 நாட்கள் சென்றபின் திரும்பி சொந்த ஊருக்கே வந்தாள் திரும்பி வந்த விதவையை அவளுடைய மகன், வீட்டில் நுழையக்கூடாதென்றும் அப்படி நுழைந்து குடும்ப விஷயங்களை நடத்தி வந்தால் தனக்கு தன்னுடைய குலத்தோர் பெண் கொடுக்கமாட்டார்கள் என்றும் அநேக இம்சைகளைச் செய்தான். விதவைப் பெண் இவ்வூர் குடியானவர்களிடம் தன் மகன் செய்யும் இம்சையை தெரிவித்தவுடன் குடியானவர்கள் அச்சிறுவனை அழைத்து விசாரித்து விதவையை வீட்டில் அழைத்துசேர்த்துக்கொள்ளும்படி முடிவுசெய்தார்கள். ஐயோ பாவம்! குடியானவர்கள் இல்லாவிட்டால் விதவையின் கதி என்ன ஆகுமோ! இன்னும் "மணவாளனை இழந்த மாதர்கள் கோடி. மறுமணம் முடிக்காத மங்கயர் கோடி! மாதர்கள் மகிழ்வின்றி வாழ்பவர் கோடி! மங்கயர் அழிப்பது சிசு நூறு கோடி! மணவாளர் மயக்கத்தால்மாண்டவர் கோடி" என்றபடி இன்னும் அநேக வம்சத்தவர்களில் எண்ணமுடியாத விதவைகளை நாம் கண்ணாரப் பார்க்கவில்லையா என்று கேட்கின்றேன்.

விதவைகள் பெரும்பாலும் மறுமணம் முடித்துக்கொண்டால் இவ்வித இடையூறு உலகில் ஏற்படுமா? என்று கேட்கின்றேன். விதவைகளின் விஷயங்களை இன்னும் விரிவாய் எழுதுவதென்றால் முடியாத காரியம்.

ஆகையால் ஆதிதிராவிட சகோதரிகளே! மற்றும் உயர்ந்த குல வம்சம் என்று கர்வித்திரியும் சகோதரர்களே! உங்களில் விதவையான பெண்களுக்கு இனியாவது மறு விவாகம் செய்து அவர்களை நல்வழியில் நடக்க முயற்சி செய்யும்படி வணக்கத்துடன் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஓர் ஆதிதிராவிடப் பொதுநலஊழியன்.

---

## சகோதரர்களே! தமிழர்களே! ஏமாறாதீர்கள்.

சங்கராச்சாரியார் யாருக்கு குரு?
சுமார்த்தப் பார்ப்பனர்களுக்கு குரு.
யானை, குதிரை, காலாட்படை, ஆடம்பரத்தைக் கண்டு மயங்கவேண்டாம்.

தமிழர்களே! நாமே கடவுளென்றிடும் பாதகத்தவராம் பார்ப்பனர்க்கு குருவாம் சங்கராச்சாரியார் வந்துவிட்டார். டோரா போட்டு விட்டார். பார்ப்பன குரு வந்தால், பார்ப்பனரல்லாதார் குருட்டுத்தனமாகவும், மூட நம்பிக்கைகொண்டும், சுயமரியாதையை விட்டு, அவர் காலில் பணத்தைக்கொட்டி, காலைக்கழுவி தண்ணீர் குடிக்கவேண்டுமோ? காலைக்கழுவின அழுக்குத் தண்ணீரைக் குடித்தால் நோய் உண்டாகும். நாம் எத்தனை ஆயிரம் கொடுத்து பாதபூஜை செய்தாலும், நாம் சூத்திரன் (தேவடியாள் மகன்) என்றே அழைக்கப்படுவோம். சுத்த ரெத்தமுள்ள தமிழர்களே! நடு நிலைமையுடன் யோசனை செய்து, ஷை கூட்டத்தாருக்கு உதவாமல், ஏழை மக்களுக்கும், துறையூரில் ஓர் உயர்தர கலாசாலை நிறுவுவதற்கும் செலவு செய்யுங்கள். நம் காசைக்கொடுத்து, நாம் ஏன் பார்ப்பனர் அடிமை என்ற பட்டம் வாங்கவேண்டும். யோஜியுங்கள்? எச்சரிக்கை.

முசிரி தாலூகா, சுயமரியாதைச்சங்கத்தார்.

5ம் பக்கத்தொடர்ச்சி.

ற்கு வேண்டியமருந்து, அல்லது ரணசிகிச்சை முதலிய முறைகளை அவர்கள் தேடுவதில்லை. 'குலதெய்வத்திற்கு பூஜைபோடுகிறேன், வீரனுக்குப் பொங்கலிடுகிறேன், காளிக்கு அபிஷேகஞ்செய்கிறேன், இன்னும்எத்துணை சாமிகளுக்கோ திருப்தி உண்டாகும்வண்ணம் காணிக்கைசெலுத்துகிறேன், நோய் சொஸ்தமாகட்டும்' என பிரார்த்தனைசெய்து கொள்ளுகிறார்கள். வியாதி குணமடைந்துவிட்டால் தங்கள் வீட்டிலுள்ள பாத்திரம் முதல், தங்களுடைய நகைவரை எல்லாவற்றையும் விற்று சாமிகளுக்கு பூஜைபோடுவார்கள். வியாதி குணமடையாது நோய்வாய்ப்பட்டவர் இறந்துவிடுவாராயின் 'தெய்வத்தக் கண்ணில்லாமல் போய்விட்டது, எத்தனையோ சாமிகளை வேண்டிக்கொண்டேன். ஒன்றும் பயன்படவில்லை' யென வீட்டிலுள்ள பெண்கள் குய்யோ முறையோவென்று கத்தி, கூக்குரலிட்டு வாயிலும், வயிற்றிலும் அடித்துக்கொண்டு சுவற்றில் மோதிக்கொள்வார்கள். பின்பு 'நாமென்ன செய்வது, எல்லாம் விதியின்பயன், யாரைநொந்து ஆவதென்ன' என்று சில சமயங்களில் மனதைத் தோற்றிக்கொள்வார்கள். என்னமடமை, என்னபேதமை!

மேயோவே! இப்பாழான இந்துக்களின் மனதை நீ எவ்வளவு நன்றாக அறிந்து கொண்டனை! இவர்கள் ஞானத்தையும், தத்வார்த்தங்களையும் நீ ஏடுகளில் தேடியலையவில்லை என்று ஓலங்காமிடுகிறார்களே!

ஒருநாட்டின் சமயஞானமும், தத்துவமும் அந்நாட்டு ஜனங்களுக்கு உண்மை தெரிபிடித்து, ஒழுக்கத்துடனும், பகுத்தறிவுடனும் நடக்க இடந்தாமல், அவர்களை சாதிவேற்றுமை. உயர்வு-தாழ்வு- மூடநம்பிக்கை-வீண்சடங்கு, தப்பான எண்ணங்களால் வேதனைப்பட வைத்திருக்குமாயின், அந்த ஞானத்தையும், தத்துவத்தையும் கொளுத்தி எறிதல் சாலச்சிறந்ததே.

'உங்கள் நாட்டாருக்குள்ளும் இம்மௌடீகம் ஓரளவு காணக்கிடக்கிறது. நீங்களும் பிரார்த்தனையால் நோயைச் சொஸ்தமாக்க வெண்ணி உங்கள் தேகத்தையும், அறிவையும் பாழ்படுத்திக் கொள்ளுகிறீர்கள். நீங்களும் குருமார்களென்ற தாகர்களை ஏற்படுத்தி அவர்கள் கால்களை வணங்குகிறீர்கள். நீங்களும் உங்கள் பெண்களை அக்குருமாருக்கு இணையாக கன்னிமாடத்தில் மொட்டையடித்து விட்டு வைத்திருக்கிறீர்கள். எம்மதமானாலும், மதமென்ற கட்டுப்பாட்டில் யார் இருக்கிறார்களோ அவர்கள் ஓரளவு தங்கள் அறிவையும் சுதந்திரத்தையும் அடகு வைத்தவர்களாகவே இருப்பார்கள். இவ்வடிமைத் தனத்தை நீக்கவே எங்கள் நாட்டில் 'சுயமரியாதை' இயக்கம் தோன்றியிருக்கிறது, இவ்வியக்கத்தின் நோக்கங்களும், பலன்களும், இவ்வியக்கத்தலைவரான ஈ. வெ. ராமசாமி நாயக்கருடைய பேரறிவும், ஒளியும் உள்ளுடான மேல்நாட்டையும் எதிர்காலத்தில் எட்டிப்பார்க்கும். மதத்தின் அழிவால் மக்கள் விடுதலையும், மக்கள் விடுதலையால் தேச விடுதலையும் சித்திக்கும். அதுவே எங்கள் சுயராஜ்யம்!

## பனகால் ராஜா சாகிப் திருநாள். ஏழைகளுக்கு அன்னதானம்.

வட ஆற்காடு ஜில்லா திராவிட சங்கத்தில் இன்று காலஞ்சென்ற நமது மாபெருந்தலைவர் பனகால் ராஜா சாகிப் அவர்களின் உருவப்படத்தை டவுன் ஹாலுக்கு ஊர்வலமாக கொண்டு போய் காலஞ்சென்ற தலைவரைபற்றி சொற்பொழிவுசெய்தார்கள். அவ்வமயம் இவ்வூர் பிராமணரல்லாத பிரபலஸ்தர்கள் பலரும் விஜயஞ் செய்தார்கள்.

இன்று பகல் 12 மணிக்கு ஆரம்பித்து ஷை சங்கத்தில் வட ஆற்காடு ஜில்லா போர்டு தலைவர் ராவ் பஹதூர் கரூர் கிருஷ்ணசாமி நாயுடுகாரு தம் சொந்த செலவில் மாபெருந்தலைவரின் ஞாபகார்த்தமாக ஆயிரம் ஏழைமக்களுக்கு குறையாமல் சாப்பாடு அளித்தார்கள்.

## தென்னிந்திய ஆதி திராவிட வைதீக மகாஜன சங்கம்.

அவைத்தலைவர் சுவாமி சகஜானந்தர் சுகவீனமாய் இருப்பதால் 24...12...28 ல் கூட்டுவதாக இருந்த ஷை சங்கத்தின் அரசியல் மகாநாடு 6...1...29ல் பம்பாய் நாகவி தமிழ் பாடசாலை காம்பவுண்டில் ஸ்வாமிஜிபவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும்.

எஸ். பி, சந்தான ராஜூ காரியதரிசி,

## பார்ப்பனீயம் ஒழிந்த திதியும் நன்கொடையும்.

பக்கோ வாசியும் P. L. P. K. M. காரியஸ்தருமாகிய திருவாளர்கருப்பய்யாபிள்ளையவர்கள் காலஞ்சென்ற தமது தந்தையாரின் திதியை பார்ப்பனீயத்தை அறவே ஒழித்துச் செய்து ஏழைகளுக்கும் பந்துமித்ரர்களுக்கும் விருந்தளித்ததுமன்றி சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்காக 'குடி அரசு'க்கு ரூபாய் ஒன்று நன்கொடையாக அனுப்பியுள்ளார், அன்னாருக்கு எமது மனமார்ந்த வந்தனம்.

---

## செங்குந்தர் மகாஜன சங்கம். 16வது மகாநாடு.

1928 ஸு டிசம்பர் மீ 29, 30 தேதிகள் விபவ ஸு மார்கழி மீ 15, 16 சனி, ஞாயிறு தினங்களில் செங்குந்தர் மகாஜன சங்கம் 16 வது மகாநாடு சேலம் அம்மாப்பேட்டை செங்குந்தர் வாலிப சங்கத்தின் தலைவரும், முனிசிபல் கௌன்சிலருமான ஸ்ரீமான் எஸ். பெரியசாமி முதலியார் அவர்கள் தலைமையில் கோயமுத்தூருக்கு அடுத்த மேலைச்சிதம்பரம் என்னும் திருப்பேரூரில் நடைபெற்றது,


# தேவை.

தஞ்சாவூர் தாலூகா போர்டு ஆண்கள், பெண்கள் பாடசாலைகளுக்காக போதனுமுறை பயின்று தேறிய உபாத்தியாயர்களும், உபாத்தினிகளும் தேவை. 10—1—1929-க்கு மேல் அனுப்பப்படும் மனுக்கள் கவனிக்கப்படமாட்டா.

சம்பள விகிதம் கீழ்க்கண்டவாறு:—

| கிரேடு. | உபாத்தியாயர்கள். | உபாத்தினிகள். |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| செகண்டரி கிரேடு ... | 30—1-A—35. | |
| எலிமெண்டரி ஹையர் கிரேடு ... | 20—½-A—25. | 25—1-A—30. |
| எலிமெண்டரி லோயர் கிரேடு ... | 15—½-A—20. | 20—1-A—2?. |

தஞ்சை தாலூகா போர்டு கச்சேரி, 20—டிசம்பர்—1928.

த. வே. உமாமகேசுவரம். தலைவர், தாலூகா போர்டு, தஞ்சாவூர்,

"ஏன் வீணாக அவஸ்தைப் படுகிறீர்கள்"
உடனே எழுதுங்கள்.

# அமிர்த சாரம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் குவிந்துவருகின்றன. மனிதனுக்கு ஏற்படும் எல்லா வியாதிகளையும் துளிக்கணக்கில் உபயோகிக்க, நிமிடக்கணக்கில் ஆச்சரியமாய் குணமடையலாம்.

ஒரு புட்டியின் விலை 2—0—0 கேட்லாக் இனும்.

Apply to— சங்கராம் மெடிகல்ஹால், குகை, சேலம். (S. I. R.)

4ம் பக்கத்தொடர்ச்சி.

வந்தபோதே கூறுகிறார். கோசலை இராமனைக் கண்டவுடனே "வாக்குத்தவறாத உன் தந்தை உனக்கு முடி புனைவர்! என மகிழ்ந்து கூறியதாக வால்மீகிகூற கம்பரோ "இடையூறுண்டோ நெடு முடி புனைதற்கென்றாள்" எனக் கூறுகிறார். இதனால் கோசலை இருந்த நிலையையே கம்பர் மாற்றிக் கூறுகிறார்.

கம்பருடைய நோக்கமெல்லாம் இராமனையும்தசரதனையும்கோசலையையும்நல்லவர்களாகக் காட்டவேண்டுமென்பதே. அதற்காகக் கதைப்போக்கையே மாற்றுகிறார். இராமன் கோசலையிடம் பரதன்முடிபுனைவதையும்தான் காடேகவேண்டியதையும் ஏக காலத்திலே கூறினான் என வால்மீகி கூற, கம்பர் முதலில் பரதன் நாடாள நேர்ந்ததென இராமன்கூறினானெனவும் பின்னரேமெதுவாகத்தான் காடேகுவதைக் கூறினானெனவும் கூறுகிறார். இத்துடன் அமையாது தமது அறிவு வன்மையால்கோசலை மிகவும் நல்லவள் என்பதை காட்டிக்கொண்டே போகிறார்; இராமன் பரதன்நாடாளப்போகிறானென்றவுடன்,

"முறைமையன்றென்ப தொன்றுண்டு மும்மையின்
நிறை குணத்தவன் நின்னினு நல்லனால்
குறைவிலன் எனக் கூறினள் நல்லர்க்கும்
மறுவிலன்பினில் வேற்றுமை மாற்றினாள்
என்று பின்னரு மன்னவனேவிய
தன்னெறுமை மகனே உனக்கறன்
நன்று நம்பிக்கு நானில நீ கொடுத்
தொன்றி வாழுதி ஊழிபல என்றாள்"

என்ற கவிகளைக் கம்பர் பாடுகிறார். இவ்விதமாக உண்மையில் கோசலை கூறியிருப்பளேல் அவள் மிகவும் தூயமனத்தினளென்பதற்கு ஐயமென்? வால்மீகி கூறும் காமியும் சபலசித்தவளுமாகிய கோசலையை இவ்வாறு மிகத்தூயவளாகப்புரட்டி காட்டுகின்றாரோ கம்பர். இதனாலேயே தமிழ் மக்கள் அறிவு கெட்டது. ஆரியர் தமது வீரனாகிய இராமனைத் தெய்வம் போலக்காட்ட முயன்றதிலும் தமது பார்ப்பன மதத்தை நிலை நாட்ட முயன்றதிலும் அதிகமான பயனைத் தந்ததாகும் இக்கோடரிக் காம்பாகிய கம்பர் புரட்டு. இனியேனும் தமிழ் மக்கள் இப்புரட்டில் மயங்காது உண்மையுணர்வாராக. ஐயோ, இக்கம்பரது அறிவும் கவித்திறமையும் இவ்வாறு தமது தமிழ்க்குலத்தை வேரறுக்க முயன்ற ஆரிய வீரன் கதையைப்பாடி தமது இனத்தையே ஏமாற்றுவதில் பயனாயினவே. கோசலை 'நினைத்து வருந்தியதெல்லாம் தன் சக்களத்திகள் கொடுமைகளோ' என வால்மீகி கூறக் கம்பர் அவைகளைப்பற்றி ஓர் சொல்லேனும் கூறினாரல்லர்.

கோசலை தன்மகன் மனப்படி இசைந்து அவனை வழியனுப்பு மாறு பார்ப்பனரை அழைத்துச்செய்த ஓமம் முதலிய செயல்களையெல்லாம் கம்பர் கூறாது அவள் 'பரதன்நாடாளட்டும் இராமன் காடேகா வண்ணம் மன்னனிடம் வேண்டப்போகிறே'னென்று அங்கே விரைந்தேகுவதாகக்கூறுகிறார். இராமன் சுமித்திரை அரண்மனையை அடைந்ததாக வால்மீகி கூறவேயில்லை. கம்பரோ இராமன் கோசலையைத் தொழுது சுமித்திரை வீட்டைநோக்கிப் போனான் என்று இத்துடன் இராமன் செயல்களை நிறுத்திக்கொண்டு கோசலை செயல்களை விவரிக்கிறார். இப்போக்கு வால்மீகிக்குமுற்றிலும் மாறுபட்டதே.

கோசலை தசரதனை அடைந்து புலம்பினதாகவும் அங்கே வசிட்ட முனிவன் வந்து தசரதனைத் தேற்றியதாகவும், தசரதன் வசிட்டனை நோக்கி கைகேசியின் மனதைமாற்றி இராமனுக்கு முடி சூட்டுமாறு வேண்டியதாகவும், முனிவன் கைகேசியை மனமாற வேண்டியதாகவும், கைகேசி இராமன் காடேகானேல் உடனே மடிவேனென்று கூறியதாகவும், முனிவன் அவளை இகழ்ந்துரைத்ததாகவும் கம்பர் கூறி விட்டு பின் தசரதன் முனிவனை நோக்கிப்பின் வருமாறு கூறுவதாகக் கூறுகிறார்.

"இன்னே பலவும் பகர்வான் இரங்காதாளை நோக்கிச்-சொன்னேன் இன்றே இவளென் தாரமல்லள் துறந்தேன்-மன்னே யாவான் வரும்பரதன் றனையும் மகனென்-றுன்னேன் முனிவா அவனுமாகான் உரிமைக்கென்றான்"

இது வால்மீகி கூற்றுக்குமாறு பட்டது. வால்மீகி அயோத்தியாகாண்டம் பன்னிரண்டாம் சருக்கத்தில் 'இராமனைக் காட்டுக்கனுப்புவது பரதனுக்கு இஷ்டமானால் நான் இறந்த பிறகு அந்த பாபி என் உத்தரகிரியைகளை செய்யவேண்டாம்' என்றும், சருக்கம் பதினான்கில் 'இந்த அபிஷேகத்தை நீ தடுத்தால் மகாபாபியான நீயும் உன் மகனும் எனக்குத் தர்ப்பணம் முதலிய உத்தரக்கிரியைகளைச் செய்யவேண்டாம்' என்றும் தசரதன் கைகேசியை நோக்கிக் கூறுவதாக கூறுகிறார். இது அவனுடைய உண்மை மனப்பான்மையன்று. இப்பேச்சுக்களெல்லாம் கைகேசியை அச்சுறுத்தித்தன் வழிப்படுத்தவே கூறியவனாவான் பின் சருக்கம் 42 ல் இராமன் காடேகும்போது பின் தொடர்ந்த தசரதன் தளர்ந்து 'நீ என் மனைவியல்லள். பரதன் இந்த அரசைப் பெற்று மகிழ்ந்தால் அந்த மகா பாபி எனக்குச் செய்யும் உத்தரகிரியைகள் எனக்குச் சேரவேண்டா' என்று கடிகிறான். இக்கூற்று வசிட்டன் முதலியவருக்குத் தெரியாது; கோசலை அறிவாள். மேலும் பரதன் தசரதனுக்கு நெருப்புமூட்டுகிறானென்றும் அவனே ஏனைய உத்தரக்கிரியைகளையெல்லாம் செய்கிறானென்றும், பின்னரும் இராமனைப்பரதன் சந்தித்தபோது "நானும் சத்துருக்கனும் உத்தரக்கிரியைகளைச் செய்து விட்டோம். நீரும் இலக்குவனுமே செய்தல்வேண்டும்" என்று கூறியதாகவும் வால்மீகி தெரிவாக எழுதுகிறார். இதற்கு முற்றிலும் மாறுபாடாகக் கம்பர் இச்சொல்லைத் தசரதன் வசிட்டனிடம் கூறியதாகவும் அதனால் உத்தரக்கிரியைகள் செய்யத் துணிந்த பரதனை இச்செய்திகூறி முனிவர் தடுத்து விட்டதாகவும் அதனால் பரதன் கீழே விழுந்து புலம்பினனெனவும் கதையையே மாற்றி விட்டார். இதனால் செயல்களையெல்லாம் மறைத்து அவனை ஓர் பாவியாகக் காட்டுகிறார், என்னே இக்கம்பர்தம் தீய மதி! இவ்வாறு மாற்றிப் பரதனை யாவரும் இகழுமாறு செய்ததால் இவர் என்ன பயன் பெற்றார். இவ்வுண்மையை யறிந்தால் இப்புன்மதிக் கம்பரை அறிவுடையார் வெறுக்காமலிருக்க முடியுமா? இவர்கள் எவ்வளவு நயமொடுதிகழ்ந்தாலென்? புல்லிய உரைகள் புல்லிய கதையில் பொய்மையாக அமைந்து இன்கவியாயின் அவ்வின் கவி யாது பயன் தருவதாகும். பயனில் சொற்களைப்பாராட்டிப்பாடிய இக்கம்பர் தம் புல்லறிவிருந்தவாறென்னே! தன்னயக்கருத்தின் தடிப்பே இது போலும்! செந்தமிழ் நாட்டுச்சீரிய கதைகள் இப்பொய்ம்மையாளர் கண் முன் தோன்றிலபோலும்! இவர்கவித்திறம் இவர் வாக்குப் போலவே புல்லிடையுகுத்தகுதேயும் போலும் நிற்க-

பின்னர் கோசலை, மன்னனிடம் குற்றமில்லையென அறிந்து இராமனைக் காக்க வேண்டினளெனவும், தசரதன் இராமனை நினைந்துபுலம்பினதாகவும், முனிவன் தான் இராமனை வனமேகாமல் தடுப்பதாகக் கூறியதாகவும், மன்னன் மயங்கி தான் முன் வேட்டையாடச் சென்றபோது ஓர் முனிமகனைத் தவறுதலாக கொன்றதை அறிந்த குருடராகிய முனிவர் அவனைப் பிள்ளைகளைப்பிரிந்து சாவாயெனச்சபித்ததாகவும் அதனால் தான் இராமனைப் பிரிந்து கட்டாயம் சாகப்போவதாகவும் கூறினனெனவும் கம்பர் கூறுகிறார். இச்சாப வரலாற்றை தசரதன் சாகும்போது கூறுவதாக வால்மீகி எழுதுகிறார். இதன் உண்மையை அச்சமயத்தில் ஆராய்வோம்.

கம்பர் பின்னர், வசிட்டன் மன்னனையடைந்து அங்கே கூடியிருந்தவரிடம் நிகழ்ந்தது கூறினதாகவும், அதைக் கேட்டவர் யாவரும் அழுதரற்றினரெனவும், அதைக்கேட்டு இலக்குவன் துடிதுடித்து வந்தானெனவும் அவனுடைய கோபத்தை அவன் தாயாலறிந்த இராமன் சுமித்திரை வீட்டிலிருந்து வந்து தணித்ததாகவும் எழுதுகிறார். இவ்வரலாறும் வால்மீகிக்கு முற்றிலும் மாறுபட்டதே. வசிட்டன் கைகேசியை இகழ்ந்தது இராமன் முன்னிலையில் என்று அவன் காடேகும் சமயத்தில் கூறுகிறார். மேலும் இலக்குவன் இராமனைவிட்டுப் பிரியாமல் கைகேசியரண்மனையடைந்ததும், பின் கோசலை வீடடைந்ததும் அங்கே தசரதனைச் சினந்துரைத்ததும் இராமன் அவனையும் கோசலையையும் தேற்றினதும் பின் அவனுடனேயே சீதையிடம் சென்றதுமாகிய வால்மீகி கூறும்வரலாறெல்லாம் முன்னரே தெளிவாகக் கண்டோம். இவ்வுண்மைகளுக்குமாறாகக் கம்பர் இராமன் இலக்குவனை சினந்து நின்றபோது கண்டதாகக் கூறுகிறார். நாம் மேலே ஆராய்ந்துள்ள இலக்குவனுடைய இழிகுணத்தைக்காட்டும் பேராசைப்பேச்சுக்களையெல்லாம் கம்பர் மறைத்தார். ஏனெனில் அவனை நல்லவனாகக் காட்டவேண்டியே. வால்மீகி பெரும்பாலும் தசரதனையே இலக்குவன் சினந்துரைத்ததாகக் கூற, கம்பர் கைகேசியையே பெரும்பாலும் சினந்துரைப்பதாகக் கூறுகிறார். மேலும் கம்பர்.

"சிங்கக்குருளைக்கிடு தீஞ்சுவையூனை நாயின்
வெங்கட்கடுங்குட்டியையூட்ட விரும்பினளே"

என்று இலக்குவன் கூறுவதாகக்கூறுகிறார். இவ்வுவமையில், தீஞ்சுவையூன் போன்றது அரசாட்சி. அது சிங்கக்குட்டிபோன்ற இராமனுக்கேஉரியது. அதை நாய்க்குட்டிபோன்ற பரதனுக்குக் கைகேசி கொடுக்க விரும்பினாள் என்பது விளங்குகிறது. அரசாட்சியை ஊனென்றது மிகவும் இழிவான உவமை.

பின் இராமனும் இலக்குவனும் சுமித்திரையை கண்டு அவள் நன்மதி கேட்டதாகக் கூறுகிறார். இது முற்றிலும் மாறுபட்டதே. இராமன் சுமித்திரையைக் காணவே இல்லை. கடைசியாகக் காடேகும்போது கண்டும் தனித்து வணங்கவில்லை என்று வால்மீகி கூறுகிறார். சுமித்திரை இச்சமயம் இலக்குவனுக்குக்கூறும் நன்மதிகளையெல்லாம் இராமன் காடேகும் சமயம் அவள் தசரதன் முன்னிலையிற் கூறியதாகக் வால்மீகி கூறுகிறார்.

சுமித்திரையிடமிருக்கும்போது கைகேசியனுப்பிய மரவுரிகள் இராமனுக்குவருகின்றன என்று கம்பர் கூறுகிறார். ஆனால்வால்மீகியோ தசரதனிடம் வழியனுப்பப்போனபோது இராமனே கைகேசியிடம் கேட்டுவாங்கிக் கொள்கிறான் என்று கூறுகிறார். இவையெல்லாம் பின்னர் விவரமாக ஆராயப்படும்.

இருவரும் சீதையைப் பார்க்கப்புறப்பட்டபோது இலக்குவனும் மரவுரியுடுத்தமை கண்டு இராமன் தடுக்க, தானும் கானம் வரப்போவதால் தடுக்கக்கூடாதென இலக்குவன் கூற இராமனும் இசைகிறான். இது கம்பர் கூற்று. வால்மீகி சீதையை அழைத்தேக இசைந்த பின்னர் நிகழ்ந்ததாக கூறுகிறார்.

அச்சமயம் வசிட்ட முனி வந்து தோன்றி இராமனைக் காடேகாதிருக்கக் கூறியதாகவும் அதற்கு இராமன் இசையவில்லையென்றும் பின் முனிவன் அரசனிருந்த இடம் சென்றனனென்றும் கம்பர் கூறுகிறார். இவையெல்லாம் வால்மீகி கூறு

(3ம் பக்கத் தொடர்ச்சி.)

கெட்டுப்போவதென்றால் முன் தவர்ந்துபோன ஐம்பத்திரண்டு கட்டுப்பாடும் பிராமணதருமத்தைக் கெடுக்காமலிருந்திருக்குமா?

பாலிய விவாகத்தால் பார்ப்பாரசமூகமும் அதைப்பின்பற்றிய சமூகமும் துன்பப்படுவது மல்லாமல் நாட்டிற்கும் நஷ்டமென்பது பிரத்திய க்ஷத்திலிருக்கிறதே ஒழிய பிராமணதருமம்கெட்டுப்போகுமென்பதற்கு சாஸ்திரங்களோ பெரியவர்கள் கதையோ அனுபோகமோ காணோம். ருதுமதி விவாகம் செய்துகொண்ட பெரியவர்களினாலேயே வேதங்கள் பிரபலமடையவும் பிராமணதருமமென்று இப்பொழுது பெருமைபேசவும் காரணங்களேற்பட்டிருக்கிறதென்பதற்கு ஆக்ஷேபிக்க முடியாத பெரியவர்கள் கதைகளிருக்கின்றன. வேதத்தின் கர்த்தாக்களான ரிஷிகளையும் கலியுகத்திற்கு தருமம்சொன்ன பராசரையும் விட்டுவிடுவோம். ஈஸ்வர பிரசாதத்தால் விதவையின் கர்ப்பத்தில் ஸ்ரீசங்கரர்உற்பத்தியானவரென்பது அவர் சரித்திரம், கடவுளுக்குப்பிறந்திருந்தாலும் ருதுவாகி அநேகநாள் கழிந்த பெண்ணுக்கே சங்கரர் பிறந்தார் என்பது எட்டிலிருக்கும் விஷயம். இப்பொழுது அவருடைய பந்துக்களும் ஜாதியும் ருதுவாய் அநேகநாள் கழித்து 20, 30 வயதிலும் இப்பொழுதும் விவாகம் செய்வது இன்றும் வழக்கம். அவர்கள்தான் நம்பூதிரிப் பாப்பார்கள். அவர்கள் பாப்பாரஜாதியில் உயர்ந்தவர்கள். வைதீக நம்பூதிரிகளும் அவர்கள் பெண்களும் பாப்பார் வீட்டில் சாப்பிடமாட்டார்கள். பட்டர்களென்று பாப்பாரைஒருபடி தாழ்த்தியே நினைப்பார்கள். எல்லாப்பாப்பார்களும் நம்பூதிரிபந்தியில்சாப்பிடுவார்கள். இந்த உயர்ந்த பாப்பார நம்பூதிரி ஜாதிக்கும் அவர்கள்ஜாதி சங்கரருக்கும்பராசஸ்மிருதி பிரமாணமல்லவோ? விதவையின் வயிற்றில் பிறந்த சங்கரருக்கும் ருதுவானபின் விவாகம் செய்யும் நம்பூதிரி பாப்பார்களுக்கும் பிராமணதருமம் கெட்டுப்போகாதோ? இவர்கள் கலியாணம் பாரமார்த்திகத்தில் சேராதா? மற்றபாப்பார்களுடைய பிராமணதருமத்தைவிட நம்பூதிரிப்பாப்பார்களிடம்பிராமணதருமம்இல்லாவிட்டால்சங்கரர்நம் பூதிரிப்பாப்பானாய்ப்பிறக்கவுமில்லையே. ருதுமதிவிவாகம்செய்தால்பிராமணதருமம்கெட்டுப்போய்விடுமென்றுசெல்லுவதுசத்தியமானால் ருதுமதிவிவாகம்செய்யும் ஜாதியில்வந்த சங்கரர் பிராமணதருமத்தை நிலைநிறுத்தவில்லை என்று எந்தப்பாப்பானாவது சொல்லுவானா? இப்பொழுது சங்கராச்சாரியின் பிரதிநிதியான சங்கரமடத்து சாஸ்திரி 'ருதுமதிவிவாகம் பிராமண தருமத்தைக் கெடுத்துவிடும், பாரமார்த்திகம் விவாகமாகாது. சங்கரர் கட்டளைப்பிரகாரமே தென்தேசத்துப் பாப்பார்கள் நடப்பார்கள்'' என்று கமிட்டிமுன் சாக்ஷிசொன்னாரே. இவை கீழ்க்கடை ஞாயத்திற்கு ஒத்திருக்கிறதா? பாப்பார்களின் உயர்வைக்காப் பாற்ற நினைத்துக்கொண்ட ஆலோசனையா? வைதீக கொடுமையா? தங்களை புத்திசாலிகளென்று சொல்லிக்கொள்ளும் பெருமையா? ஸ்ரீ சங்கரர் பாப்பார்களுக்குப்பெரிய குருவல்லவா? இவரில்லாவிட்டால் இவர்களின் ஆதிக்கம் இனியுமிருக்குமா? குருவிற்கும் குருவின் ஜாதிஜனங்களுக்கும் பிரமாணமல்லாத தருமவிதியை சிஷியர்கள் வைத்துக்கொண்டு, அதைவிட்டுவிட்டால் பிராமணதருமம் கெட்டுப்போகுமென்று சொல்லுவது எப்படி ஞாயமாகும்? அன்னிய சாகைபடியாமல் மூன்றுவேளையும் குளித்து முப்பது நாழிகையும் ஜெபம்செய்யும் குருஜாதியான நம்பூதிரிப்பாப்பானின் பிராமணதருமம் கெடாமல் அன்னிய சாகையான ஆங்கிலேயமேபடித்து அறுபது நாழிகையும் உலக விவகாரியங்களில் உழன்று திரியும் சிஷியஜாதிப் பாப்பார்களுக்கு மிஞ்சியிருக்கும் பிராமண தருமமென்ன?

குருவிற்கும் அவர்கள் கூட்டத்திற்கும் பிராமணதருமம் வேறு. சிஷிடர்களுக்கும் அவர்கள் கூட்டத்திற்கும் பிராமணதருமம்வேறா? இப்படி இருந்தால் கலியுகபராசஸ்மிருதி ஒன்றா இரண்டா? பாப்பாரக்கலியாணம் பாரமார்த்திகமாயிற்றே, விதி ஒன்றாகத்தானே இருக்கவேண்டும். இரண்டுவழி எப்படி வந்தன? குருவழி சிஷ்யன்வழி இரண்டும் வேறுவேறாகவிருக்கிறதே. இதிலெதுசரி? குருவழியைக் குற்றம்சொல்லுவதுபெரும்பாவமாயிற்றே? அதையும் மீறி குற்றம் சொல்லிவிடலாமென்றால் குருவழியின் சரித்திரம் சிறிதும் இடம்கொடுக்காதே. குருவோ சங்கரர். அவரோ சிவபெருமானின் அவதாரம், அவர்செய்ததோ செத்தும் கெட்டும் சிதறியும்போன பாப்பார கர்மங்களுக்கு ஜீவன் கொடுத்தது. அவர்ஜாதியோ விஷ்ணுவின் அவதாரமான பரசுராமனால் உண்டாக்கப்பட்டது. அந்த பரசுராமர் எல்லா அசுரர்களுக்கும் ராக்ஷதர்களுக்கும் ஒவ்வொருயுகங்களிலும் தகப்பனாயிருந்த காசிபருக்கு தன்னால் ஜெயிக்கப்பட்ட பூமிகளை தானமாகக்கொடுத்தார். அக்காசிபர் நம் பூதிரிப்பாப்பார்களுக்கு மலையாளத்தை தானமாகக் கொடுத்தார். விஷ்ணுவால் உண்டாக்கப்பட்டஜாதி—சிவபெருமான் குருவாய் அவதாரம்பண்ணி பரதகண்டத்துப் பாப்பானுக்கெல்லாம் உபதேசம் செய்த ஜாதி—பிர்மாவின் வம்சமாய் எல்லா யுகங்களிலுமிருந்த காசிபனால் தானமேற்றுக்கொண்டஜாதி. இப்பொழுதும் அன்னியசாகை அதிகம் படியாமல் தென்தேசத்துப் பாப்பானைவிட வேதம் படித்து மூன்றுவேளையும் குளித்து முப்பதுநாழிகையும ஜெபம்செய்யும் ஜாதியான குருபரம்பரைப் பாப்பாரக்கூட்டம் அத்தனையும் ருதுவானபின்னே விவாகம் செய்கிறார்கள். இவர்களைப் பாப்பார்களல்லவென்று தென்தேசத்துப் பாப்பார்கள் சொல்லத்தயாராயிருக்கிறார்களா?

மானினிடமிருந்துண்டானரிச்யசிருங்கரையும், குசத்திலிருந்துண்டான கௌசிகரையும், நரியினிடமிருந்துண்டான ஜம்புகரையும், புற்றிலிருந்தும் பார்ப்பானிடமிருந்துமுண்டானவால்மீகரையும், முயலிடமிருந்துண்டான கௌதமரையும் ஊர்வசியிடமுண்டான வசிஷ்டரையும், புலச்சியிடமுண்டான பராசரரையும், மீன்வாணிச்சியிடமுண்டான வியாசரையும், கலசத்திலிருந்துண்டான அகத்தியரையும், இன்னும் பலவாருண்டானவர்களையும் தன் குலத்திற்கு மூலபுருஷராக சொல்லிக் கொள்ளும் சிஷியபாப்பார ஜாதிகள் அநேகமாக சேவகாவிர்த்திகளையே செய்கிறார்கள். ருதுமதிவிவாகம் கூடாதென்று சொன்ன பராசஸ்மிருதி சேவகாவிர்த்திசெய்யும் பாப்பானை கடையனாக ஒதுக்கிவிட்டது. இவன் பிராமண தருமத்திற்கு விலக்கானவன். வக்கீல் தொழில் தன்னிச்சைத் தொழில் என்று எண்ணிக்கொள்ளலாம், வக்கீல்தொழிலில் பணம்பல ஏமாற்றால் பறிக்காமல் சரியாகவே நடந்தாலும் தூக்கநேரம்போக மற்றெல்லா நேரங்களிலும் பொய்க்குப்பெரிதுபொய்யும் மெய்க்குப்பொய்யும் கண்டுபிடிக்கவே காலத்தையெல்லாம் போக்க பிராமணதருமச்சட்டமிடம் கொடுக்கவில்லை. பணமிருக்கும்பாப்பார்கள் தேவபூசை, பிதிர்கர்மம், நித்தியகர்மனுஷ்டானங்கள் சரியாக நடப்பதற்கு கூலியாள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். எஜமான் பட்டா தன் கூலியாள்பேருக்கு மாற்ற இங்கிலீஸ் சட்டம் ஒத்துக்கொள்ளுமே யல்லாமல் பாரமார்த்திக தருமசாஸ்திரம் அவனவன் கருமத்தை அவனவன் செய்யவேண்டுமென்று சொல்லுகிறதே அல்லாமல் கூலியாள் வைத்துச்செய்வதை ஏற்றுக்கொள்ளவில்லை, இவர்களும் ருதுமதி விவாகம் செய்தால் பிராமண தருமம் கெட்டுப்போகுமென்று சொல்லுகிறார்கள்.

இச்சமயம் அய்யங்கார்களும், மதம் போய்விடும். பிராமணதருமம் கெட்டுவிடுமென்றுசொல்லுகிறார்கள், இவர்களும் சுமார்த்தப் பாப்பார்களும் மற்றவர்களை தாழ்த்தி தங்களை உயர்வாகச் செய்து கொள்ளுவதில் சம்மந்தமேற்படுத்திக் கொள்ளுகிறார்களே யல்லாமல் இவர்களுடைய மதம், கொள்கை, ஏற்பாடு, நடையுடைபாவனை எல்லாம் வித்தியாசப்பட்டதே. திருமேனிகளின் வரலாறுகளை எழுத இந்த வியாசத்தில் இடமில்லை, வைஷ்ணவர்கள் குருபரம்பரையில் உயர்ந்தவர்களானதால் இரண்டுவார்த்தையால் அவர்கள்சொல்லுவது ஞாயமில்லை என்று காட்டுவோம். கூரத்தாழ்வாரும் அவருடையமகன்பட்டரும் இல்லாவிட்டால் வைஷ்ணமதத்திற்குப் பெருமையில்லை. ஸ்ரீராமானுஜாச்சாரியார் உரைசெய்த வியாச சூத்திரத்திற்கே ஸ்ரீபாஷ்யமென்னும் பெயர்என்று பெருமைபேசும் வைஷ்ணவர்களுக்கு கூரத்தாழ்வாரும் பட்டரும் இல்லாவிட்டால் அந்தப்பெருமையேது? உடையவர் உரைசொல்ல எழுதினவர் கூரத்தாழ்வார். உடையவர் விட்டுவிட்டதை ஆழ்வார் மௌனத்தால் உடையவருக்குணர்த்த, அவர்பின்சொல்ல, அத்தனையும் எழுதினது கூரத்தாழ்வாரல்லவா? பின் மற்றவைகளுக்கு வைஷ்ணவவியாக்யம் செய்துகொடுத்தது அவர்பிள்ளை பட்டரல்லவா? இவர்களில்லாவிட்டால் வைஷ்ணவ பிராமணதருமம் நிலைத்திருக்குமா? ருதுவாகி நீக்கிவைக்கப்பட்டிருந்த பெண்ணை விவாகம் செய்துகொண்டார் கூரத்தாழ்வார். அந்தம்மாள்வயிற்றில் பிறந்தவர் பட்டர். கூரத்தாழ்வாராலும்பட்டராலும் என்ன பிராமணதருமம் கெட்டுப்போயிற்றென்று எந்த அய்யங்கார் சொல்லமுடியும்? கூரத்தாழ்வார் பெண்ஜாதிக்குச் சீரங்கப்பெருமாள் பிரசாதம் கொடுத்தனுப்பினார். இதனால் ருதுமதிவிவாகம் ரெங்கநாதருக்கும் சம்மதமென்று ஏற்படவில்லையா? கடவுள் சம்மதத்திற்குள் வந்து அவரால் மரியாதை செய்யப்பட்ட காரியம் தருமத்தைக் கொடுத்துவிடுமென்று சொல்லுகிறவர் ஆஸ்திகன் எப்படி ஆவான்? (தொடரும்)

தநதே.

பின் இராமன் இலக்குவனுடன் வீதிவழியே சென்றதாகவும், நகரத்தார் பலரும் அது கண்டு புலம்பினரெனவும், பின்னர் இராமன் சீதையையடைந்து உண்மை கூறியதாகவும், சீதை அவன் தன்னைப் பிரிவானென வருந்தி உள்ளே போய் மரவுரியுடுத்து வந்தாளெனவும் அதைக்கண்ட இராமன் எனக்கு எல்லையில்லாத துயர் தருவாய் என்றானென்றும், அதுகேட்டசீதை என்னைக்கூடியிருத்தலால் உண்டாகும் துயரம் என்னைப் பிரிவதால் இன்பமாமோ என்று சீறினளென்றும் அதன் பின் இராமன்ஒன்றும் பேசாமல் அவளை அழைத்தேக இசைந்தானெனவும் கம்பர் கூறுகிறார். சீதை மரவுரியுடுத்தது தசரதன் முன்னெனவும் அவள் உடுத்தத்தெரியாமல்விழித்து இராமனை உடுத்திவிடச் சொல்கிறாளெனவும் வால்மீகி கூறுவதற்குக் கம்பர் கூற்றுப் பொருந்தாது மாறுபடுகின்றது. மேலும் சீதை இராமனைப்பற்றி மிகவும் கேவலமாகப் பேசின பேச்சையெல்லாம் வால்மீகி விஸ்தாரமாகக் கூறியிருக்க அவைகளையெல்லாம் கம்பர் மறைத்து விட்டு மேலே கூறிய ஒரே வார்த்தையே கூறினளெனக் கூறுகிறார். இது சீதையையும் இராமனையும் மிகவும் நல்லவர்களாகவும் ஒழுக்கமுடையவராகவும் உலகத்துக்குக் காட்டி ஏமாற்றப்போலும். இனிமேற் செல்லுதும்.

சுயமரியாதை பெறவேண்டுமானால்
"குடிஅரசு" "திராவிடன்"
பத்திரிக்கைகளை வாங்கிவாசியுங்கள்

## கலம்பகம்:

தூயவெழிலழகனார் திரட்டியது.

இந்து மதத்தினர் நம்பும் வேதம்......... முதலிய புராணங்கள்.........நித்தியமான உண்மைகளைப்புரிய முறையில் எடுத்துக்கூறுவனவல்ல.........

குறிப்பிட்ட காலப்பகுதியில் நல்லதென்று கொள்ளப்பட்ட ஒரு வழக்கத்தை மற்றொரு காலத்தில் குருட்டுத் தனமாகப் பின்பற்றி நடத்தல் கூடாது.—மகாத்மா காந்தி,

ஃ ஃ ஃ

நான் சென்னையைப்பார்த்தவரையில் இந்துமதத்தின்பேரால் எத்தகைய நடவடிக்கைகள் பழக்கத்திலும் அமுலிலும் இருந்து வருகிறதாக அறிகிறேனோ அவைகள் ஒரு காலமும் நம்மை சுயராஜ்யத்திற்குச்செலுத்திக்கொண்டு போகாதென்று நிச்சயமாய்ச் சொல்லுவேன்.

சென்னை காங்கிரஸ் தலைவர்கள் தாழ்த்தப்பட்டவர்களது விடயத்தின் பக்கம் மறந்தும் கூடத்தலை வைத்துத் தூங்கவில்லை என்று தோன்றுகிறது. சென்னை காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளாகவே இன்னமும் குருட்டு நம்பிக்கை இருந்து வருகிறதுமல்லாமல் இந்து புராணங்களில் கற்பிக்கப்பட்ட எல்லா வேற்றுமைப்பாடுகளும் அவர்கள் உள்ளத்தில் இன்னமும் உறைந்திருக்கின்றன.

சென்னை மாகாணத்தில் உள்ள கோவில்களினுடைய பூஜை முதலிய நடைமுறைகள் நம்மை சமூக வீழ்ச்சிக்கே-வேற்றுமைகளுக்கும் நரகத்திற்கே-இட்டுச் செல்கிறதென்று எனக்கு நன்றாய்ப் புலப்பட்டு விட்டது.

கோவில்களில் தெய்வ வழிபாட்டின் பெயரால் துராசாரம், விபசாரம், நடந்துகொண்டிருக்கிற வரையிலும், ஜனங்கள் விபசாரத்தொழிலைக் கோவில்களின் வழிபாட்டில் ஒன்றாகவே முக்கியமாகக்கருதி நடத்திக்கொண்டிருக்கிற வரையிலும், கடவுள் பக்தியைத் தெரிவிப்பதற்கு நெற்றியில் நாமம் முதலிய குறிகள் நீண்டோ அகன்றோ வட்டமாகவோ இருக்கவேண்டியது அத்தியாவசியமென்று எண்ணி நெற்றியில் குறி அணிந்துகொண்டிருக்கிற வரையிலும், அரசியல் சுதந்தரத்தைப் பாவச் செய்வது ஒருக்காலும் முடியவே முடியாது. லாலா லஜபதி

ஃ ஃ ஃ

ஜாதியைச் சமயத்தைக் கோத்திரத்தைப் பரம்பரை பாத்தியத்தைக்கூறி, பாமரர்களை ஏமாற்றி வந்த காலம் மலை ஏறிப் போய்விட்டது. தங்க வெளியார்,

ஃ ஃ ஃ

தாய் பாஷையை விட்டு, அரசாங்கபாஷை மேல் ஏறி ஆகாயத்தில் பறக்கும் பார்ப்பனர்கள் எவ்வளவு தூரம் பறந்தாலும் பறக்கட்டும், நீங்கள் பயப்படாதீர்கள், சூத்திரர்என்று அழைக்கப்படும் எனது சகோதரசகோதரிகளே! தாய்ப்பாஷையையும் தாய்நாட்டுத்தொழில்களையும், வெளிநாட்டுப்புதுமுறைத்தொழில்களையும் செவ்வையாகக் கற்க முன் வந்து நில்லுங்கள். பறந்து செல்கின்ற பார்ப்பனர்கள் தற்போது வஞ்சகத் தன்மையாக மேலோர் என்று தங்களைக் கூறிக் கொண்டு பல வகையிலும் பொருள் பறித்துச் சாப்பிடும் கேடுடையோர் இனி உங்களது பாதநிழலின் கீழ் விழுந்து அலறுங்காலம் சமீபித்து விட்டது. இது சத்தியம், சத்தியம்.

இராமாநந்தா,

இந்தச் சர்க்காரை இப்பொழுதே நாம் திருத்திவிடலாம், ஆனால் அதற்குப்பிறகு (திருத்திய பிறகு) இத்தேசத்தை எப்படி நிர்வகிப்பது என்பது தான் இப்பொழுது பெரிய சந்தேகம்.

வெள்ளையரிடம் இந்தியர் என்ன கேட்கிறார்களோ அதையே தான் பார்ப்பனர்களிடம் பார்ப்பனரல்லாதார் கேட்கிறார்கள்.

ஒரு காலத்தில் வரதராஜலு

ஃ ஃ ஃ

பிரம்மா நெருப்பிலிருந்து இருக்கு வேதத்தையும், காற்றிலிருந்து யசுர்வேதத்தையும், சூரியனிலிருந்து சாமவேதத்தையும் கறந்தான், மனுதருமம், அத் க 23.

பிரம்மாவானவன் தன்னுடைய நான்கு முகங்களிலும் இருந்து இருக்கு, யசுர், சாமம், அதர்வண வேதங்களையும் உண்டாகச்செய்தான்.

ஸ்கந்தம் பாகவதம் 3 அத் 12 சு 34 37

கி. மு. 3000 வருடங்களுக்கு முன் நிகழ்ந்த வடநாட்டு ஆரியர்கள் தங்கள் பழக்கங்களையே சுலோகங்களாகச்செய்து இருக்கு முதலிய வேதங்களைப் பிரித்தார்கள்,

இந்தியதேச சரித்திரம்
சுந்தரவரதாசாரி எழுதியது

ஃ ஃ ஃ

கேள்வி மாத்திரத்திலேயே ஒன்றை நம்பி விடாதே

எழுதிவைத்திருப்பதினாலேயே ஒன்றை நம்பிவிடக் கூடாது

வெகுகாலமாக நடந்துவருவதாக தெரிவதினாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது

அனேகர் பின்பற்றுவதினாலேயே ஒன்றைநம்பிவிடக்கூடாது

கடவுளாலோ மகாத்மாவாலோ சொல்லப்பட்டது என்பதாலேயே நம்பிவிடக் கூடாது

எதாவதொரு விஷயம் நம்முடைய புத்திக்கு ஆச்சரியமாய் தோன்றுவதாலேயே அதைத் தெய்வீகமென்றோ மந்திர சக்தி என்றோ நம்பிவிடக்கூடாது.

எப்படிப்பட்ட விஷயமானாலும் நடுநிலைமையில் இருந்து பகுத்தறிவிற்குத் தாராளமாய் விட்டு ஆலோசிக்கத் தயாராயிருக்க வேண்டும். அப்படியிருந்தால் தான் கண்மூடித்தனமான பழக்க வழக்கம் முதலியவைகளை ஒழிக்க முடியும்.

சீர்திருத்த மகாநாட்டில் நாயக்கர்.

எதிர்பார்த்தது வந்து விட்டது!!

## தமிழ் டைப் மிஷின்கள்.

எழுத்துக்கள் சுத்தமாக இருக்கக்கூடியது எல்லாவித வேலைகளுக்கும் உதவக்கூடியது. ஒவ்வொரு ஆபீசுக்கும் தேவையானது வியாபாரிகளுக்கு அவசியமானது. விபரத்திற்கு எழுதவும்.

ராம் நாராயணன் அண்ட் கம்பெனி,
147, அக்கிரார வீதி, ஈரோடு.

## திருத்தணிகை கருணீகர் 3-வது மாகாணமகாநாடு.

மேற்கண்ட மாகாண மகாநாடு சித்தூர் ஜில்லா திருத்தணிகையில் நிகழும் 1928-ம் வருஷம் டிசம்பர் மாதம் 29-தேதி சனிக்கிழமை நடைபெறும். திருவாளர் சி. கேசவப்பிள்ளை அவர்கள் B. A. தலைமை வகிப்பார்கள். சித்தூர் திருவாளர் ராவ் சாகிப் டாக்டர் P. கோவிந்தப் பிள்ளை வரவேற்புக் கழகத்தலைவர்.

30-தேதி ஞாயிற்றுக்கிழமை இரண்டாவது மாகாண கருணீக இளைஞர்கள் மகாநாடு நடைபெறும். திருவாளர் டாக்டர் M அர்ஜுனம் பிள்ளை M. B. B. S. அவர்கள் தலைமை வகிப்பார்கள். C, குருநாதம் பிள்ளை B. A., வரவேற்புக்கழகத்தலைவர். திருவாளர் V. திருவேங்கடம்பிள்ளை தொண்டர் படைத்தலைவர். தொண்டர்களாகச்சேர விரும்புவோர் ஜெனரல் செக்ரடரிக்கு முன்னுடி தெரிவித்தல் வேண்டும். இம்மகாநாடுகள் அரசியல் சம்பந்தமானவைகளில் தலையிடா. ஆகவே யாவரும் விஜயம் செய்யலாம்.

பொதுக்காரியதரிசி.

## தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 45-ஆம் ஆண்டு விழா.

இந்த "நாற்பத்தைந்தாம் ஆண்டு விழா" நிகழும் மெய்கண்டான் யாண்டு 706 விபவ ௵ மார்கழித்திங்கள் 15—16 ஆம் (1928-ம் ௵ டிசம்பர் மாதம் 29-30 ஆம்) நாட்களில் இந்நகர் மேல்லூர். வடக்குரத வீதியில் சபையின் நிலையமான திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மடாலயத்துக்குக் கீழ்பக்கம் அமைக்கப் பெறும் கொட்டகையில் நடைபெறுவதாகும்.

"நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் அவைத்தலைமை வகிப்பார்கள்.

தொ. ச. சு. சோமசுந்தரம் பிள்ளை,
எ. எஸ். முத்துபிள்ளை,
அமைச்சர்கள்.

## சுயமரியாதைத் தொண்டன்.

இஃது வைக்கம் வீரரும் 'குடி அரசின்' பத்திராதிபருமான உயர் திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கரின் உதவியைக்கொண்டு, 'குடி அரசின்' கொள்கையைக்கொண்டும் வெளிவரப்போகும் ஓர் உயர்தர வாரப் பத்திரிகையாகும்.

இதன் வருஷ சந்தா ரூ 3—0—0
வெளி நாடுகளுக்கு ரூ 4...0...0
ஆசிரியர், S. சாமிநாதன்.

விலாசம்:—
மானேஜர், "சுயமரியாதைத்தொண்டன்"
பள்ளிபாளையம்.
ஈரோடு மார்க்கம்,



# ஜீவரசம்.

## ஓர்சிறந்த குடும்ப ஒளஷதம்

ஜீவரசம் சகல வியாதிகளையும் குணப்படுத்துவதில் முதன்மை பெற்றது.

ஜீவரசம் குழந்தைகள் முதல் விருத்தாப்பியர் வரை பயமின்றி உபயோகிக்கக்கூடியது. அதற்கு பத்தியம் அனுபானமில்லை.

டாக்டர்கள், உத்தியோகஸ்தர்கள், ஜமீன்தார்கள், எஸ்டேட் துரைமார்கள், வக்கீல்கள், தேசிய தலைவர்கள் உபயோகித்து நன்கு மதித்து நற்சாக்ஷி பத்திரங்கள் தந்துள்ளார்கள். ஒரு முறை உபயோகித்துப்பார்த்தால் அதன் உண்மை விளங்கும்.

விலை ரூபாய் 1—8—0. செலவு வேறு,

வியாபாரிகளுக்கு விலை வேறு.

ஏஜண்டுகள் தேவை, விபரத்திற்கு எழுதுக

**ஜீவரசம் கம்பெனி, (லிமிடெட்)**

**(2) காரைக்குடி S. I.**

முக்கிய வியாபாரிகள்:—

T. N. சொக்கலிங்கம் பிள்ளை அன் சன்ஸ்,
வடக்கு சித்திர வீதி, மதுரை.

M. இஸ்மாஹீல் சாஹிப்,
அய்யங்கடை, தஞ்சாவூர்.

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சர்ய நிவர்த்தி!!

# சுவாச காச ரோக நிவாரணி.

# Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலிய வைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒருமுறை பரீக்ஷித்து பார்ப்ப தவசியம்.

48-நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர்: பூ. மா. சொக்கலிங்க முதலியார். திருநாவுக்கரசு வைத்தியசாலை
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)

## ‘திராவிடன்’

தினப்பதிப்பு சந்தா விபரம்.

| | |
|---|---|
| சென்னை நகரில் மாதமொன்றுக்கு | ரூ. 1—6—0 |
| சென்னையிலும் ஏஜண்டு உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு | „ 1—0—0 |
| தனிப்பிரதி | „ 0—0—6 |
| மலாய் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு | „ 18—0—0 |

மானேஜர்,
“திராவிடன்” மவுண்ட்ரோட்,
மதராஸ்.

## திருப்பூர் பனியன்ஸ்,

அழகாயும் உறுதியாயும் நீடித்து உழைக்கக்கூடியதாயும் உள்ள பனியன்கள் நம்மிடம் கிடைக்கும்.

32 இஞ்சு டஜன் 1-க்கு 4—8—0

வேண்டியவற்றிற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

## ‘விஸ்வநேசன்.’

விஸ்வகுல முன்னேற்றத்திற்கு
உழைத்துவரும் ஒரு
வாரப்பத்திரிகை

தற்கால நிலைமைக்கேற்ற வண்ணம் பொதுவான சீர்திருத்தக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டது.

ஆசிரியர்:— திரு. கா. சுப்பண்ணாச்சாரி
இதன் வருட சந்தா ரூ 3—0—0
வெளிநாட்டுக்கு ரூ 4—0—0
விலாசம்:— மானேஜர்,
‘விஸ்வநேசன்’ காரியாலயம், ஈரோடு

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி
மெடல் பெற்ற

## விதைகள் செடிகள்.

8 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேடலாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள்- 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
வெட்டர்சரி தோட்டம், சேலம்,

## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. பண்டங்கள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி.
புதுச்சேரி.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு “உண்மை விளக்கம்” பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.